DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative, kailain.thillai@gmail.com
Ragu Thillainathan, Sales Representative, homesbyraghu@gmail.com

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய எம்மை அழையுங்கள்
416-752-1524

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

List Your Property Free
PROPERTYMAX.LK
+94772332300

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam, Broker
Homelife/Future Realty Inc., Brokerage
என்னை அழையுங்கள்
Direct: 416-897-9155
Office: 905-201-9977
e-mail: raj.p@rogers.com

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
More than 10 Years experience in the field of Canadian Immigration
Kokulan Baskaran, Tax Consultant
403-2855 Markham Road, Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam, Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY



29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1543 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday October 31, 2025


# கம்போடியாவின் சவுத் ஈஸ்ட் ஏசியா பல்கலைக்கழகமும் அங்கோர் தமிழ்ச்சங்கமும் இணைந்து நடத்தும் சோழப்பெருவேந்தர் இராஜேந்திர சோழரின் கடாரவெற்றியின் ஆயிரமாவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டம்




கம்போடியாவின் சவுத் ஈஸ்ட் ஏசியா பல்கலைக்கழகமும் அங்கோர் தமிழ்ச்சங்கமும் இணைந்து நடத்தும் சோழப்பெருவேந்தர் இராஜேந்திரசோழரின் கடாரவெற்றியின் ஆயிரமாவது ஆண்டு கொண்டாட்டம். சிறப்பு மாநாடு. (1024-2025).

எதிர்வரும் 22, 23 ஆகிய இரண்டு நாட்கள் கம்போடியா தேசத்தில் உள்ளசியிம்ரீப், அங்கோர். நகரில் நடைபெறவுள்ளது.

(தொடர்ச்சி 5ம் பக்கம்)

# கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் நடத்திய இவ்வருடத்திற்கான "விருது விழா"வில் ஐவர் கௌரவிக்கப்பெற்றனர்

கடந்த 25ம் திகதி சனிக்கிழமை, ஸ்காபுறோ நகர மண்டபத்தில் கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் நடத்திய இவ்வருடத்திற்கான “விருது விழா“வில் ஐவர் கௌரவிக்கப்பெற்றனர்.

நூற்றுக்கு அதிகமான பார்வையாளர்களும் கலை இலக்கிய ஆர்வலர்களும் கலந்து சிறப்பித்த மேற்படி விழாவில் திருமதிகள் யோகரத்தினம் செல்லையா. கலாநிதி பார்வதி கந்தசாமி. திருவாளர்கள் குரு அரவிந்தன். நகுலசிகாமணி நடனசிகாமணி மற்றும் வி. என். மதியழகன் ஆகிய ஐவர் படைப்பிலக்கிய விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பெற்றனர்.

சிறந்த முறையில் ஏற்பாடு செய்யப்பெற்றிருந்த மேற்படி விழாவில் விருது பெற்ற ஐவரும் இணையத்தின் தற்போதைய தலைவர் க. ரவீந்திரநாதன் - செயலாளர் வாசுதி நகுலராஜா-பொருளாளர் ராஜ்குமார் மற்றும் நிர்வாக சபையின் ஏனைய உறுப்பினர்கள் விருதாளர்களோடு இணைந்து எடுத்துக் கொண்ட படம் இங்கு காணப்பெறுகின்றது.




சிறு கற்கள் கொண்டு பெரும் சரித்திரம் படைப்போம்.
சிறு துளி பெரு வெள்ளம்
நாம் ஒன்றாய் சேர்ந்து கட்டி முடிப்போம்..
தமிழ் சமூக மையம் Tamil Community Centre

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
*கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்றவர்கள்
*நம்பிக்கை நாணயத்திற்கு உத்தரவாதம்
குறைந்த வட்டியுடன் எவ்வளவு தொகை வேண்டும் என்றாலும் மிசிசாகாவிலும் பிறாம்ரனிலும் அமைந்துள்ள எமது அடைவு மாளிகையை நாடுங்கள்.
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St, East (2nd flr), Mississauga, ON, L5A 1W7 — 905-272-1222
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 — 905-794-4404
online service: www.remitbee.com

அதிவிரைவான அகதிக்கோரிக்கை விண்ணப்பங்கள் உள்ளடங்கலான சகலவிதமான Immigration சேவைகளுக்கும்
Prime Legal Services
(Eraa Supermarket Plaza)
5928 Finch Avenue E, Unit 231
905-334-6851

# Dollard-des-Ormeaux D.D.O இற்கான நகர சபைத் தேர்தல்–2025

## RYAN BROWNSTEIN

### District Seven-7



**Dollard-des-Ormeaux D.D.O இற்கான நகர சபைத் தேர்தலில் போட்டியிடும் உங்கள் தோழனும் நண்பருமாகிய என்னை இந்தத் தேர்தலிலும் வாக்களித்து தேர்ந்தெடுங்கள்!**

**கடந்த தேர்தலிலும் என்னையே ஒரு முகமாகத் தெரிவு செய்தமைக்கு நன்றி!**



*Authorized by Ashley Stopek,*
*Official Agent for Ryan Brownstein*

தேர்தல் தினத்தன்று - நவம்பர் மாதம் 2ம் திகதி, 2025 அன்று
வாக்களிப்பு நிலையத்திற்குச் சென்று எனது பெயருக்கு நேரே புள்ளடியிடுங்கள்.

**65, Sunshine, D.D.O** என்னும் விலாசத்தில் உள்ள **Sunshine Academy** பாடசாலை
வாக்களிப்பு நேரம்: காலை 10:00 மணி தொடக்கம் இரவு 8:00 மணி வரை

முன்கூட்டியே வாக்களிக்க விரும்புகின்றவர்கள் **(Advance Voting)**
ஒக்டோபர் 26ம் திகதி, 2025 ஞாயிற்றுக்கிழமை

**2900 Lake Street** என்னும் விலாசத்தில் உள்ள
**Polyvalente Des Sources High School** பாடசாலை
வாக்களிப்பு நேரம்: மதியம் 12:00 மணி தொடக்கம் இரவு 8:00 மணி வரை




Canada
We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

| | |
|---|---|
| EDITOR IN CHIEF: | R. N.Logendralingam |
| OFFICE ASSISTANT: | Pirabu |
| GRAPHIC: | Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune |
| TECHNICAL: | Janani and Bala |
| PRINTERS: | Web News Printing Inc. |
| DISTRIBUTION: | Yogarajah |

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## உதயன் கதிரோட்டம்

# உலகில் போதைப் பொருள் கடத்தலையும், அதன் விற்பனையையும், பாவனையையும் கட்டுப்படுத்த முனையும் நாடுகளில் இலங்கையும் ஒன்றாக முன்னேறுகின்றதா?

உலகின் பல நாடுகள் போதைப் பொருள் என்னும் சமூக விரோத நுகர்வுப் பொருளால பல வகையில் பாதிக்கப்படுகின்றன என்பது "வெள்ளிடை மலையா-கத்" தெரிகின்ற ஒரு விடயமாகிவிட்டது. இந்தக் கொடிதான .போதைப் பொருள் கடத்தலையும். அதன் விற்பனையையும், பாவனையையும் கட்டுப்படுத்த முனையும் நாடுகளாக பல தேசங்கள் தற்போது எழுந்து நிற்கின்றன. உலகின் பல நாடுகளில் சமூக விரோதிகள் சட்டவிரோதமாக போதைப் பொருட்களை உற்பத்தி செய்து அந்தந்த நாடுகளுக்கு அவப்பெயர்களை ஏற்படுத்தி விடுகின்றனர். இவ்வாறான பாதகமான செயல்களில் அரசியல்வாதிகளும் சம்பந்தப்பட்டுள்ளார்கள் என்பதை அறிகின்றபோது நிச்சமயமாக சமூக அக்கறை கொண்டவர்கள் "கொதித்து" எழும் நிலையே ஏற்பட வேண்டும். ஆனால் அச்சம் காரணமாக நியாய விரும்பிகள் கூட மௌமாகவே நாட்களைக் கடந்து செல்கின்றார்கள். எனினும் சில தேசங்களின் அரசியல் தலைவர்களும் அமைச்சர்களும் மிகவும் துணிச்சலாக போதைப் பொருள் பாவனை மற்றும் விற்பனையை தடுக்கும் முயற்சி என்னும் "விசப்பரீட்சையில்" தங்கள் துரித நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளார்கள். இவ்வாறான நாடுகளில் இலங்கையும் ஒன்றாக கணிக்கப்பெறுவதையும் இலங்கையின் ஜனாதிபதியான அநுர குமாரவும் அவரது அமைச்சர்கள் பெருமக்களும் தீவிரமாக ஈடுபட்டுள்ள மகிழ்ச்சி தரும் செய்திகள் உலகெங்கும் பரவி வருகின்றன.

இலங்கையின் பாடசாலை மாணவர்கள் மற்றும் இளம் தலைமுறையினர் மத்தியில் வேகமாகப் பரவிவரும் ஐஸ் என்ற போதைப்பொருள் குறித்த தலைப்பு அண்மைய நாட்களாக பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. ஐஸ் போதைப்பொருளின் அச்சுறுத்தலை எதிர்த்துப் போராடும் பொருட்டு, நாட்டில் பாடசாலை மாணவர்களை முதன்மையாகக் கொண்டு பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படடன.
குறிப்பாக தாயகத்தில் தமிழர் பிரதேசங்களில் மாணவர்களும் இளைஞர்களும் போதைப் பொருள் பாவனை மற்றும் விற்பதை ஆகிய பாதகமான விடயங்களுக்கு அடிமையாகி அங்கும் ஆயிரக்கணக்கான இளம் உயிர்கள் "போதைக்கு" பலியாகியுள்ளதையும் செய்திகள் வாயிலாக நாம் அறிந்து வருகின்றோம்

இலங்கையின் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் புள்ளிவிபரங்களின்படி ஹெரோயின் போதைக்கு அடிமையானவர்களின் எண்ணிக்கை சுமார் 93 இலட்சம் எனவும் கஞ்சா போதைக்கு அடிமையானவர்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட நான்கு இலட்சம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போதைக்கு சிறுவர்களிடையே வேகமாக பரவிவரும் ஐஸ் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் தொடர்பில் உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தப்பட்ட புள்ளிவிபரங்கள் எதுவும் முன்வைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எவ்வாறாயினும், ஏற்பட்டுள்ள நாசகார நிலைமையை சமாளிக்கும் வகையில், ஆபத்தை விளைவிக்கும் மருந்துகள் மற்றும் ஆபத்தான போதைப்பொருள் பாவனையை தடுப்பதற்காக ஜனாதிபதி செயலணியொன்றை ஸ்தாபிக்க அரசாங்கம் தீர்மானித்து அதனை நடைமுறைப்படுத்த திடசங்கற்பம் பூண்டுள்ளது அநுர குமாரவின் அரசாங்கமும் அமைச்சரவையும் ஆகவே இது வலுவான சமூகப் பிரச்சனையாக பரிணாமம் எடுக்கும் செயற்பாடாக அமையும் என்று எதிர்பார்க்கலாம்

போதைக்கு அடிமையானவர்களின் மறுவாழ்வு அரசாங்கத்தின் முக்கிய பொறுப்பாகும். அந்த நபர்களை அவர்கள் குழந்தைகளாக இருந்தாலும் சரி பெரியவர்களாக இருந்தாலும் சரி நல்ல மனிதர்களாக சமூகமயமாக்குவது அரசாங்கத்தின் மற்றும் ஒட்டுமொத்த சமூகத்தின் பொறுப்பாகும். இலங்கையில் போதைக்கு அடிமையானவர்களுக்கான வதிவிட சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு சேவைகள் அரசாங்கம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களால் நடத்தப்படுகின்றன. ஆனால் இந்நாட்டில் போதைக்கு அடிமையானவர்களின் தேவையுடன் ஒப்பிடுகையில், புனர்வாழ்விற்கான அவசியமான வசதிகள் மிகக்குறைவாகவே காணப்படுவதாக இந்தச் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள பல தரப்பினர் சுட்டிக்காட்டுகின்றனர். எனவே, இது கவனம் செலுத்த வேண்டிய பாரிய சமூகப் பிரச்சினை ஆகும்.

மேலும் போதைப் பொருள் சட்டவிரோதமாக உற்பத்தி செய்யப்படும் நாடுகளில் பிரேசிலும் ஒன்று என்பதை நாம் அறிவோம். அந்த நாட்டின் ரியோ டி ஜெனீரோ நகரில் போதை பொருள் கும்பலுக்கு எதிராக அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக 2 ஆயிரத்து 500-க்கும் மேற்பட்ட போலீசார் மற்றும் ராணுவ வீரர்கள் அண்மையில் இணைந்து அதிரடி நடவடிக்கையில் ஈடுபட்டனர். அப்போது, போதை பொருள் கும்பலுக்கும், காவலருக்கும் இடையே கடுமையான துப்பாக்கி சண்டை நடந்தது. இதுபற்றி ரியோ நகர கவர்னர் கிளாடியோ கேஸ்டிரோ கூறும்போது, போதை பொருள் கும்பலுக்கு எதிராக ஹெலிகாப்டர்கள் மற்றும் கவச வாகனங்கள் கொண்டு அதிரடி தாக்குதல் நடத்தப்பட்டது.

இதில், போதை பொருள் கும்பலை சேர்ந்த சந்தேகத்திற்குரிய நபர்கள் 60 பேர் மற்றும் 4 காவலர்கள் உள்பட 64 பேர் பலியானார்கள். 81 பேர் வரை கைது செய்யப்பட்டு உள்ளனர். ரியோ நகர வரலாற்றில் மிக பெரிய நடவடிக்கையிது என அவர் குறிப்பிட்டார். இதில், 93 துப்பாக்கிகள் மற்றும் 500 கிலோவுக்கும் கூடுதலான போதை பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு உள்ளன. இந்த மோதலில் பலர் காயமடைந்து உள்ளனர். இதனால், அந்த பகுதியே புகை மண்டலம் போல் காட்சியளித்தது. போதை பொருள் பயங்கரவாதம் மற்றும் திட்டமிட்ட குற்றங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இந்நடவடிக்கை தேவையான ஒன்று அதிகாரிகள் தெரிவித்தனர்.
இவ்வாறாக போதைப் பொருள் பாவனைக்கு எதிராக உலகின் பல நாடுகளும் வெளிப்படைத் தன்மையோடு இந்த "ஆபத்தான" முயற்சிகளில் இறங்கவேண்டும் என்பதையே சமூக ஆர்வலர்கள் விரும்புவார்கள் என்பதும் வெள்ளிடை மலையே!

Toronto சிட்டி கவுன்சிலர்
PAUL AINSLIE
WARD 24, SCARBOROUGH-GUILDWOOD

HELP IS AVAILABLE
வட்டார மக்களின் தேவை கருதி பின்வரும் சேவைகள் எம்மால் கவனிக்கப்படுகின்றன.

| | |
|---|---|
| குறைந்த கட்டனத்தில் வீட்டுவசதி | Ontario Works |
| விலங்கு சேவைகள் | வாகனத் தரிப்பிடங்கள் |
| உயர்மாடி கட்டட சட்டங்கள் | பூங்காக்கள் |
| கட்டட அனுமதி பத்திரங்கள் | காவல் துறை |
| பிள்ளை பராமரிப்பு சலுகை | பொதுச் சுகாதாரம் |
| அவசர வீட்டு வசதிகள் | வீதிகள் |
| தீயணைப்பு சேவைகள் | ஆதன வரிகள் |
| கழிவுப் பொருட்கள் சேவை | பொதுப் போக்குவரத்து |
| நூலகச் சேவை | மீள் சுலட்சியும் பசுமை திட்டமும் |
| மாநகரத் தேர்தல் | மரங்கள் |
| மாநகர அனுமதியும் சட்டங்களும் | நீர் விநியோகம் |

| நியமன அலுவலகம் | ரொரன்ரோ சிட்டி ஹால் அலுவலகம் |
|---|---|
| Scarborough Civic Centre | 100 Queen Street West, |
| 150 Borough Drive, 2nd Floor | 2nd Floor - Suite C52 |
| Scarborough, ON M1P 4N7 | Toronto, ON M5H 2N2 |
| Phone: 416-396-7222 | Phone: 416-392-4008 |
| Fax: 416-392-4006 | Fax: 416-392-4006 |

councillor_ainslie@toronto.ca www.paulainslie.com
Ward 24 Scarborough-Guildwood @Ainslie_Ward24
@cllrainslie Paul Ainslie (City of Toronto)

www.paulainslie.com 416-396-7222

மார்க்கம் நகரில் உணவகம் ஒன்றில் வேலை வாய்ப்பு

Part time continental Cook for breakfast and lunch (Monday to Friday).

Delivery Person and South Indian Cook
wanted immediately for a Restarant in Markham

Call: Chauhan at 416-988-9518

சிகை அலங்கரிக்கும் நிலையத்திற்கு வேலையாள் தேவை

ரொறன்ரோ நகரில் இயங்கிவரும் சிகை அலங்கரிக்கும் நிலையத்திற்கு வேலையாள் ஒருவர் தேவை. அனுபவம் அவசியம் தேவை. உயர்ந்த ஊதியம் வழங்கப்பெறும்.
தொடர்புகளுக்கு: 416 835 6749
என்னும் இலக்கத்தை அழைக்கவும்.

கனடிய செய்திகள்
Canadian News

# ரொறன்ரோ லேக்சோர் கிழக்கு புகையிரதப் பாதையில் "கோ" புகையிரதச் சேவை அதிகரிகரிக்கப்பெற்றுள்ளது




அக்டோபர் 27 முதல், லேக்சோர் கிழக்கு தொடரி வழித்தடத்தில் போக்குவரத்து நெரிசல் அதிகமான நேரங்களில் ஆறு புதிய தொடரிகளை இயக்கவுள்ளோம். இது, ஸ்காபரோ வாழ் மக்களுக்கு நாளாந்தாம் விரைவானதும் நம்பகத்தன்மை வாய்ந்ததுமான சேவையை வழங்கும். அதிகூடிய போக்குவரத்து நெரிசல் நேரங்களில் இப்போதுள்ள 15 நிமிடங்களுக்கு ஒருமுறையான சேவை, 10 நிமிடங்களுக்கு ஒரு தொடரி என அதிகரித்து இயக்கப்படும். இதனால், வேலை மற்றும் பாடசாலைகளிலிருந்து வீடு திரும்புவோர் விரைவாக வீட்டிற்குச் செல்ல முடியும். அதிகூடிய போக்குவரத்து நெரிசலுள்ள நேரங்களாக காலை 7 மணி முதல் 8:30 மணி வரையும், பின்நேரம் 4 மணி முதல் 6 மணி வரையுமாக வரையறுக்கப்பட்டுள்ள நேரங்களில், மக்களுக்கு வசதியான சேவைகளை இது உறுதிப்படுத்துகிறது.

இந்தச் சேவை அதிகரிப்புகள், ஸ்காபரோவில் பொதுப்போக்குவரத்தை மேம்படுத்துவதற்கும், மக்களின் அன்றாட பயண நேரங்களைக் குறைத்து அவர்களின் பயணங்களை இலகுவாக்குவதற்குமான எமது உறுதியான நிலைப்பாட்டின் ஓர் அங்கமாகும். பயண நேரங்களிடையே குறைந்த காத்திருப்பு நேரத்தில், நகரின் பல பகுதிகளையும் எளிதாகச் சென்றடையக்கூடியதான முன்னெப்போழுதுமில்லாதளவான சிறந்த சேவை இப்போது வழங்கப்படுகிறது.



# மன்னாரில் ஒரு உணவகம் ஒரு வெதுப்பகம் ஒரு வர்த்தக நிலையம் ஆகியவற்கு "சீல்"

இலங்கை செய்திகள்
Sri Lanka News

மன்னார் நிருபர்

- மன்னார் நிருபர் (29.10.2025)

மன்னார் நகர சபை எல்லைக்குள் பல்வேறு சுகாதார குறைபாடுகளுடன் இயங்கி வந்த உணவகம், வெதுப்பகம் உட்பட வர்த்தக நிலையம் ஒன்றுக்குமாக இவ்வாரம் மூன்று கடைகள் சீல் வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் நகர சபை எல்லைக்குள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவரும் உணவகங்கள் தொடர்பான ஆய்வு நடவடிக்கையின் போது பல்வேறு சுகாதார குறைபாடுகள் உள்ளடங்களாக மருத்துவ சான்றிதழ், உரிய அனுமதியின்றி இயங்கி வந்த வெதுப்பகம், உணவகம் மற்றும் வர்த்தக நிலையம் ஒன்றுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் உணவகங்கள் தொடர்பில் தொடர்ச்சியாக நகரசபைக்கு கிடைக்க பெற்று வரும் முறைப்பாடுகளின் அடிப்படையில் மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரியின் ஆலோசனைக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வு நடவடிக்கையின் போது பல்வேறு சுகாதார குறைபாடுகள் இனங்காணப்பட்ட நிலையில் குறித்த உணவகங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறிப்பாக மன்னார் மூர்வீதியில் சுகாதாரமற்ற முறையில் உணவுகளை களஞ்சியப்படுத்தி, உரிய அனுமதி பெறாது இயங்கி வந்த உணவகம் ஒன்றுக்கும் மன்னார் உப்புக்குளம் பகுதியில் பல்வேறு குறைபாடுகளுடன் இயங்கி வந்த வெதுப்பகம் ஒன்றுக்கும் மன்னார் பனங்கட்டு கொட்டு மேற்கு பகுதியில் இயங்கி வந்த ஒரு வர்த்தக நிலையத்திற்கும் மேற்படி சீல் வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ்ப்பாணம் நல்லூர் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கழிவுகளை வீசுபவர்களுக்கு எதிராக அதிரடி நடவடிக்கை!

நல்லூர் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கழிவுகளை கொட்டுபவர்கள் மீது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் ப.மயூரன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

நல்லூர் பிரதேச சபையின் கழிவகற்றல் முகாமைத்துவத்தினை மேம்படுத்துவதற்கான செயற்றிட்டங்களினை நல்லூர் பிரதேச சபை மேற்கொண்டு வருகின்றது. அது மிகப்பெரிய சவாலாக காணப்படுகின்ற போதும் அசாத்தியமானதை சாத்தியமாக்கின்ற பணியில் நாம் தொடர்ந்தும் மிகுந்த ஈடுபாட்டுடன் பயணிக்கின்றோம்.

அதன் பிரகாரம் நல்லூர் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களில் பொது இடங்களில் கழிவுகள் கொட்டப்படுவதனை தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை தடுக்கும் முகமாக முதற்கட்டமாக அதிகளவில் கழிவுகள் கொட்டப்படுகின்ற 11 பொது இடங்களை அடையாளப்படுத்தி அங்கு கண்காணிப்பு கமராங்கள் பொருத்தப்பட்டு தினமும் கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு பொது இடங்களில் கழிவுகளை வீசுபவர்கள் கண்காணிப்பு கமராங்கள் மூலமாக அடையாளப்படுத்தப்பட்டு கிராம சேவையாளர்களுக்கூடாக அவர்கள் தொடர்பான விபரங்கள் பெறப்பட்டு அவர்களுக்கு அபராதம் விதிக்கின்ற செயற்பாடுகளும் நடைபெற்றுவருகின்றது.

அதே நேரம் வாகனங்களில் வந்து கழிவுகளை வீசுபவர்களின் வாகன இலக்கங்கள் மோட்டார் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டு அவர்கள் மூலம் குறித்த வாகனங்களின் விபரங்கள் பெறப்பட்டு அபராதம் விதிக்கின்ற செயற்பாடுகள் நடைபெற்றுவருகின்றது.

குறித்த செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கென ஒரு தனி அலகும் நல்லூர் பிரதேச சபையில் உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பொது இடங்களில் கழிவுகளை வீசுபவர்கள் பலர் அடையாளப்படுத்தப்பட்டு கடந்த இரண்டு மாத காலத்தினுள் இரண்டு லட்சம் ரூபாவுக்கு மேல் தண்டப்பணம் நல்லூப் பிரதேச சபைக்கு வருமானமாக கிடைக்கப் பெற்றுள்ளது.

பொது இடங்களில் கழிவுகளை கொட்ட வேண்டாம் என்று நல்லூர் பிரதேச சபை பல தடவைகள் அறிவுறுத்தல்கள் விட்டபோதும் சிலர் அவற்றினை அலட்சியம் செய்து பொது இங்களில் கழிவுகளை வீசிவிட்டே செல்கின்றனர். அதனைக் கட்டுப்படுத்த வேண்டிய தார்மீக பொறுப்பினையுணர்ந்த நல்லூர் பிரதேச சபை கழிவு போடும் இடங்களினை அடையாளப்படுத்தல் - கண்காணிப்பு கமராக்கள் பொருத்துதல் - கண்காணித்தல் - கழிவுகளை வீசுபவர்களை அடையாளப்படுத்தல் - அவர்களுக்கு அபராதம் விதிக்கின்ற செயற்பாட்டினை முன்னெடுத்தல் என்ற பொறிமுறையினை தற்போது நடைமுறைப்படுத்தி வருகின்றது. இப் பொறிமுறைக்கு எம்மை இட்டுச் சென்றது எம்முடைய சில பொறுப்பற்ற மக்கள் கூட்டத்தினரே.




இவ்வாறு கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்பட்டு அபராதம் விதிக்கின்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் பொது இடங்களில் கழிவுகள் வீசுகின்ற செயற்பாடுகள் நிறுத்தப்படவில்லை. எனவே காலத்தின் தேவை கருதி இச் செயற்பாட்டினை முற்றாக நிறுத்துவதற்குரிய கடுமையான நடவடிக்கைகளை நல்லூர் பிரதேச சபை மேலும் விரிபுபடுத்தும். எனவே பொதுமக்கள் பொறுப்புணர்வுடன் செயற்படுமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன் என தெரிவித்துள்ளார்.


## கனடா மாதகல் நலன்புரி முன்னேற்ற ஒன்றியம்

வணக்கம்,

கனடா மாதகல் நலன்புரி முன்னேற்ற ஒன்றிய அறிவித்தல்.

கனடா நாட்டில் தமிழ்ச் சமூக மையம் (Tamil Community Center) அமைப்பது தொடர்பான விழிப்புணர்வு கூட்டம் ஒன்றினை ஒழுங்கு செய்து கனடா மாதகல் நலன்புரி முன்னேற்ற ஒன்றிய செயலவை நடாத்தவுள்ளது.

இடம்: செந்தாமரை கலாச்சார மண்டபம்
1160 Tapscott Rd, Unit 2, Scarborough ON

காலம்: 15 November 2025 3.30PM -7.00PM

கனடா நாட்டில் எமது தமிழர்களின் இருப்பு என்பது ஒன்று அவசியமானது. எதிர்கால எமது சமூகத்தின் விடிவுக்காக நாம் இணையவேண்டியது காலத்தின் கட்டாயம். ஒவ்வொரு ஊர் சங்கங்களின், தமிழ் அமைப்புகளின் நிதி பங்களிப்புகளில், செயற்பாடுகளில் தான் எமது தமிழ் சமூகத்தின் முன்னேற்றமும் எதிர்காலமும் தங்கியுள்ளது. இது ஒரு இனத்துக்கான முதலீடு. ஒன்றிணைவோம் வென்றெடுப்போம்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உங்கள் ஆலோசனைகளை வழங்குமாறு, எமது மண்ணின் எதிர்கால தூண்களான மாணவர்களையும், கனடா வாழ் மாதகல் மக்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:**
(647) 403-1203, (416) 282-0947
(416) 904-2844, (416) 816-0956

**கனடா மாதகல் நலன்புரி முன்னேற்ற ஒன்றிய செயலவை**

# மன்னார் மக்களின் குரல்களுக்கு வலுச் சேர்க்கக களத்தில் இறங்கிய "இலங்கை மெதடிஸ்த திருச்சபை"!

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்




மன்னார் மக்களின் குரல்களுக்கு வலுச் சேர்க்கக களத்தில் இறங்கிய இலங்கை மெதடிஸ்த திருச்சபையான தனது செயற்பாடுகளை நாளொரு வண்ணம் நகர்த்திவருகின்றது என எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

மன்னார் காற்றலை மின் உற்பத்தி ஆலை விவகாரம் மக்களின் நலன்களுடன் அவர்களது கருத்துக்களுக்கும் முதன்மை கொடுக்கப்பட வேண்டும் என இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் முகாமைக் குரு கந்தையா ஜெகதாஸ் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் இவ்வாறு கூறிய அவர் மேலும் கூறுகையில், இன்று மன்னார் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுள் ஒன்றாக இந்த காற்றலை விவகாரம் மாறியுள்ளது. அரசு கூறுகின்றது குறித்த திட்டத்துக்கு அனுமதி கொடுக்கப்பட்டுவிட்டது, அது நடைமுறைப் படுத்தப்படும் என்று.

மன்னார் ஆயருடன் ஜனாதிபதி சந்தித்த போதும் இதையே கூறியிருந்தார். ஆனால் மன்னார் ஆயர் இன்றும் மக்களின் விருப்பத்தின் பக்கமே இருக்கின்றார்.

உலக நாடுகள் பலவற்றில் இன்றைய காலச் சூழலில் இயற்கை மின் உற்பத்திக்கு முக்கியத்துவம் கொடுத்துவருகின்றன.

அதனால் அவர்கள் தங்கள் நாடுகளில் மக்கள் வாழிடம் அற்ற பகுதிகளில்தான் இவ்வாறான திட்டங்ககை நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

இதே நேரம் இந்த திட்டம் மன்னாரின் இயற்கையையும் சுற்றுச் சூழலையும் கடல் உயிரினங்களையும் பாதிக்கும் என எமது புவியியல் ஆய்வாளர் நாகமுத்து பிரதீபராயும் குறிப்பிட்டுள்ளார்.

எனவே மக்களின் கோரிக்கை இன்று 80 நாள்களை கடந்து போராட்டமாக முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் மக்களின் நலன்களில் நாமும் பங்காளர்களாக இருந்து அவர்களது போராட்டத்தையும் கோரிக்கையையும் வலுச்சேர்க்க முடிவுசெய்துள்ளோம் என்றும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கம்போடியாவின் சவுத் ஈஸ்ட் ஏசியா பல்கலைக்கழகமும் அங்கோர் தமிழ்ச்சங்கமும் நடத்தும் சோழப்பெருவேந்தர் இராஜேந்திர சோழரின் கடாரவெற்றியின் ஆயிரமாவது ஆண்டு கொண்டாட்டம்.

கம்போடியாவின் சவுத் ஈஸ்ட் ஏசியா பல்கலைக்கழகமும் அங்கோர் தமிழ்ச்சங்கமும் இணைந்து நடத்தும் சோழப்பெருவேந்தர் இராஜேந்திரசோழரின் கடாரவெற்றியின் ஆயிரமாவது ஆண்டு கொண்டாட்டம். சிறப்பு மாநாடு. (1024 -2025) எதிர்வரும் 22 - 23 நவம்பர் 2025 அன்று சியிம்ரீப், அங்கோர். நகரில் கம்போடியா தேசத்தில் நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டில் உலகமுழுவதுள்ள தமிழறிஞர்கள், வரலாற்று ஆய்வாளர்கள் பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர். இதையொட்டி நவம்பர் 21 - 26 வரை ஆறு நாட்கள் பன்முக விழாவாக கொண்டாடப்பட்டுள்ளது.

இந்த 6 நாட்கள் விழாவிலும் பங்கேற்று அங்கோர்வாட் களப்பயணம் மேற்கொண்டு மாநாட்டு நிகழ்விலும் கலந்துகொள்வோருக்கு அனைத்து ஏற்பாடுகளும் சிறப்பாக செய்யப்படுகின்றன.

நவம்பர் 21 முதல் 26 வரை 6 தினங்கள் தங்குவதற்கு. ஐந்து நட்சத்திர விடுதி, உணவு, கம்போடிய விசா, பேருந்து, அங்கோர்வாட், ஆயிரம் லிங்கங்கள், நாம் குல்லென் அருவி, படகு சுற்றுலா மற்றும் இரண்டு தினங்கள் மாநாட்டு நிகழ்வில் பங்கேற்பு. அனைத்திற்குமான மொத்தக் கட்டணம். அமெரிக்க டாலர் $400 மட்டுமே. **(Excluding Air Ticket)**


இம்மாநாட்டில் பங்கேற்கும் அனைவருக்கும் பல்கலைக்கழகத்தின் சார்பாக சான்றிதழ்கள் வழங்கப்படும். மேற்படி கொண்டாட்டத்தில் மலேசியா. இலங்கை. சிங்கப்பூர், கனடா மற்றும் தமிழ்நாடு ஆகிய இடங்களிலிருந்து பேராளர்கள் கலந்து சிறப்பிக்கின்றார்கள். இந்த வரலாற்று முக்கியத்துவம் நிறைந்த மாநாட்டை ஏற்பாடு செய்வதில் பின்வருவோர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றார்கள்.

1. தங்கவேலு ஸ்ரீநிவாச ராவ்- தலைவர்- **Cambodia.**
2. தாமரை ஸ்ரீநிவாச ராவ் -செயலாளர்- **Cambodia**.
3. ராஜசேகரன் ஞானசேகரன் உபதலைவர்- **Cambodia.**
4. மாணிக்கம் சதாசிவம்- இணைப்பாளர்- தமிழ்நாடு.
5. முருகேசன் ஞானமூர்த்தி- இணைப்பாளர்- தமிழ்நாடு

வரலாற்று நோக்கில் பல்லவர்களும், பாண்டியர்களும், சோழர்களும் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் அரசாண்டும்,நட்புறவு பாராட்டியும் மக்களோடு கலந்து தங்களது கலை, சிற்பம்,கோவில், பண்பாடு ஆகியவற்றை நிறுவி பெரும் பண்பாட்டுப் புரட்சியும்,வணிகத் தொடர்பும் செய்திருந்தனர்.மாநாட்டுத் தொடர்பானக் கட்டுரைகள், ஆய்வுக் கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன. கட்டுரைகள் அனுப்ப வேண்டிய முகவரி: **angkorthamizh-sangamtn@gmail.com**

அனுப்ப வேண்டிய கடைசித் தேதி: 30.09.2025

மேற்கண்ட விவரங்களுக்கு தொடர்பு கொள்ள:
திருமதி தாமரை சீனுவாசராவ்
வாட்ஸ்அப்: **+91 9489902060**
இரா. ஞானசேகரன்துணைத் தலைவர்
வாட்ஸ்அப்: **+855 81 41 21 79**






இலங்கை செய்திகள் Sri Lanka News

# யாழ்ப்பாணம் - அராலி வள்ளியம்மை வித்தியசாலையின் பரிசளிப்பு விழா!

பு. கஜிந்தன்

அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவானது 24ம் திகதி வெள்ளிக்கிழமை அன்றையதினம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்வின் ஆரம்பத்தில் விருந்தினர்கள் மேற்கத்திய வாத்தியங்கள் முழங்க விழா மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டனர். அதனைத் தொடர்ந்து மங்கல விளக்கேற்றல், இறை வணக்கம், வரவேற்பு நடனம், வரவேற்புரை, தலைமையுரை, விருந்தினர்கள் உரைகள், கலை நிகழ்வுகள், பரிசில்கள் வழங்கல் என்பன இடம்பெற்றன.

பாடசாலையின் முதல்வர் பொ.சிவரஞ்சன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.சிவசிவா கலந்து சிறப்பித்ததுடன், விழாவில் ஏனைய விருந்தினர்கள், ஆசிரியர்கள், அயற்பாடசாலை அதிபர்கள் - ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர் சங்கத்தினர், கல்வி சாரா ஊழியர்கள் பெற்றோர் மற்றும் நலன்விரும்பிகள் என பலரும் கலந்துகொண்டனர்.







# யாழ்ப்பாணத்தில் சட்டவிரோதச் செயற்பாடுகளின் தீவிரத்தைக் குறைக்குமாறு ரஜீவன் எம்.பி கோரிக்கை!



யாழ்ப்பாணத்தில் சட்டவிரோதச் செயற்பாடுகள் தீவிரத்தைக் குறைக்க அவசர நடவடிக்கை எடுக்குமாறு பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சுசார் ஆலோசனைக் குழுவுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி தெரிவித்துள்ளார்.

அவர் தனது உத்தியோகபூர்வ முகநூல் தளத்தில் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார். அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, வடக்கு மாகாணத்தில், குறிப்பாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில், பல குழுக்கள் தற்போது சட்டவிரோதச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றன என்பதை நான் கவனித்துள்ளேன். குறிப்பாக போதைப்பொருள் விற்பனை மிகுந்த அளவில் நடைபெற்று வருகிறது.

இந்த போதைப்பொருள் விற்பனையிலிருந்து பெறப்படும் பணம், சமூக விரோதச் செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படுவதுடன், மீட்டர் வட்டி வணிகம், ஆள் கடத்தல், கட்டப்பஞ்சாயத்து, குழுச் சண்டைகள் போன்ற குற்றச் செயல்களிலும் சிலர் ஈடுபட்டு வருகின்றனர்.

இச்செயற்பாடுகள் தற்போது பொது இடங்களிலும் சந்தைகளிலும் பரவலாக நடைபெறுவதால், அப்பாவி மக்களின் பாதுகாப்பு ஆபத்துக்குள்ளாகியுள்ளது. இதன் விளைவாக பாலியல் வன்முறை, கொலைகள், தற்கொலைகள் மற்றும் பல உளவியல் பாதிப்புகள் அதிகரித்து வருகின்றன.

எனவே, இவ்வாறான குற்றச் செயற்பாடுகளை தடுக்க உடனடி விசேட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். குறிப்பாக, இக்குழுக்களுடன் தொடர்புடையவர்களின் வங்கிக் கணக்குகள், சொத்துக்கள் மற்றும் வருமான மூலங்களை விசேடமாக கண்காணித்து, சட்டவிரோதமாக சேகரிக்கப்பட்ட பணம் அரசுடைமையாக்கப்பட வேண்டும் என நான் வலியுறுத்துகிறேன்.

இந்த நடவடிக்கைகள் வடக்கு மக்களின் பாதுகாப்பையும் சமூக நலனையும் உறுதிப்படுத்தும் என்பதில் நான் உறுதியுடன் இருக்கிறேன். இது இளைஞர்களை போதைப்பொருள் பழக்கத்திலிருந்து காப்பாற்றவும், சமூகத்தில் அமைதி மற்றும் நம்பிக்கையை நிலைநாட்டவும் உதவும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# யாழ்ப்பாணத்தில் பப்ஜி கேமிற்கு அடிமையாகிய நபரின் மரணத்துக்கான காரணம் வெளியானது!

யாழ்ப்பாணத்தில் பப்ஜி கேம் என்ற இணைய விளையாட்டுக்கு அடிமையான இளைஞர் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிர்மாய்த்த சம்பவம் பதிவாகியுள்ளது. உரும்பிராய் வடக்கு, உரும்பிராய் பகுதியைச் சேர்ந்த சிவகுமார் அகீபன் (வயது 31) என்பவரே இவ்வாறு உயிர்மாய்த்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த நபர் கைபேசியில் விளையாடப்படும் பப்ஜி எனப்படும் கேமிற்கு அடிமையாகியுள்ளார். இவர் மீட்டர் வட்டிக்கு பணத்தினை பெற்று குறித்த கேமிற்கான கட்டணத்தை செலுத்தி விளையாடிக் கொண்டிருந்தார்.

மீட்டர் வட்டிக்கு கடனாக பெற்ற பணமானது வட்டியும் முதலுமாக ஒரு கோடியை தாண்டிய நிலையில் தாயார் காணியை விற்பனை செய்து அந்த கடனில் இருந்து அவரை மீட்டுள்ளார்.

பின்னர் மீண்டும் அந்த கேம் விளையாடுவதற்காக தாயாரிடம் 5 இலட்சம் ரூபா கேட்ட நிலையில் தாயார் அதற்கு மறுப்பு தெரிவித்துள்ளார். இதனால் ஏற்பட்ட மனவிரக்தியால் கடந்த 25ஆம் திகதி தவறான முடிவெடுத்து வீட்டுக்கு முன்னால் நின்ற மாமரத்தில் தூக்கிட்டவேளை மாமரக் கிளை முறிந்து கீழே விழுந்து மயக்க நிலையில் காணப்பட்டார்.

இதனை அவதானித்த உறவினர்கள் அவரை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர். இருப்பினும் சிகிச்சை பலனின்றி அவர் நேற்றிரவு உயிரிழந்துள்ளார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

# யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திற்கு புதிய சமுர்த்திப் பணிப்பாளர் நியமனம்




யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திற்கு புதிய சமுர்த்திப் பணிப்பாளராக நியமிக்கப்பட்ட திரு. பொன்னம்பலம் ஸ்ரீவர்ணன் அவர்கள் 30ம் திகதி வியாழக்கிழமை அன்றையதினம் அரசாங்க அதிபர் திரு. மருதலிங்கம் பிரதீபனிடம் தமக்கான நியமனக் கடிதத்தினைப் பெற்றுக்கொண்டார்.

இவர் முன்னர் வடக்கு மாகாண சபையின் சிறுவர் நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு திணைக்களத்தின் பிரதி ஆணையாளராகவும், வடக்கு மாகாண பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளராகவும் கடமையாற்றி அன்றையதினம் (30.10.2025) யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் மாவட்ட சமுர்த்தி பணிப்பாளராக தனது கடமைகளை பொறுப்பேற்றா என்பது குறிப்பிடத்தக்கது.


**Tamilthakaval.org**

**ஒரு இலவச சேவை -- A Free Service**



**இணையத்தளம்: www.tamilthakaval.org**

இவ் இணையத்தளம் உலகெங்கும் பரந்து வாழும் ஈழத்தமிழ் மக்கள் தங்களுடைய உற்றார், உறவினர்களின் பிரிவுத் துயரச்செய்திகள், நினைவஞ்சலிகள் முதலியவற்றை எப்பொழுதும் ஏவ்வித சந்தாவுமின்றி இலவசமாகப் பிரசுரித்து அறிவித்தல் தரும் நோக்கத்தில் தாபிக்கப்பட்ட தொன்றாகும்.

மேலும் பல்வேறு முக்கிய செய்திகளைக்ககூட பகிர்ந்து கொள்ளும் வசதிகளும் இதில் தரப்பட்டுள்ளன.

செய்திகளைப் பிரசுரிப்பதற்கான விண்ணப்ப படிவமும், நிரப்புவதற்கான விதிமுறைகளும் விவரமாக இணையத்தளத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

உங்கள் வசதிக்கமைய செய்திகளை "info@tamilthakaval.org" என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பிவைக்கலாம்.

மேலதிக தகவல்களுக்கு 1-866-300-1765 என்ற தொலைபேசி இலக்கத்தில் எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.

மேலும் விவரங்களுக்கு இணையத்தளம் tamilthakaval.org பார்வையிடவும்.

இந்த இணையத்தளத்தை சில தொண்டர்கள் ஒரு சமூக சேவையாக கருதி பொறுப்புடன் நன்கு நடாத்தி வருகின்றார்கள்.

இவர்கள் இப்பணியை வெற்றிகரமாக தொடருவதற்கு ஈழத்தமிழர்களாகிய உங்களின் ஆதரவு மிகவும் இன்றியமையாதது.

உங்களால் இயன்றவரை செய்திகளை உடனுக்குடன் தெரிவித்து இந்த இணையத்தளத்தில் பிரசுரிப்பதற்கு உதவி செய்து இச்சமூக சேவையை மேன்மேலும் மேன்மைபடுத்த உதவுமாறு உங்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# யாழ்ப்பாணத்தில் இயங்கும் சொன்ட் நிறுவன ஏற்பாட்டில் வடக்கு கல்வி அபிவிருத்தி தொடர்பாக துறைசார் வல்லுநர்களின் கலந்துரையாடல்!



வடக்கு கல்வி அபிவிருத்தி தொடர்பாக துறை சார் நிபுணத்துவம் உள்ளவர்களுடனான கலந்துரையாடல் 29ம் திகதி அன்று புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள அரச சார்பற்ற நிறுவனமான சொன்ட் நிறுவனத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் வட மாகாணத்தில் கல்வி அபிவிருத்தி தொடர்பான இடர்பாடுகள் தீர்க்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாக துறை சார்ந்த நிபுணர்களால் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டது.

வட மாகாண பாடசாலைகளில் மாணவர்கள் வரவு பாடநீதியாக மாணவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினை மற்றும் முன்பள்ளிகளை அபிவிருத்தி செய்வது தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக முன் பள்ளிகளை அபிவிருத்தி செய்வது தொடர்பில் பிரதேச நீதியாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன் பிரதேச சபையினருடன் கலந்துரையாடி மாதிரி முன்பள்ளி ஒன்றினை நிபுணத்துவத்துடன் பயிற்சி வழங்குவதற்குரிய ஏற்பாடுகளை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது.

நகரப்புற பாடசாலைகளுக்கு மாணவர்கள் அதிகம் செல்வதால் கிராமப்புற பாடசாலைகள் மூடப்பட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ள நிலையில் அவற்றை பாதுகாப்பதற்கு நகர் புற பாடசாலைகளில் வகுப்புகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதை மட்டுப்படுத்துவதற்கு உரிய தரப்பினருடன் கலந்துரையாடுவது என தீர்மானிக்கப்பட்டது.



மேலும் வட மாகாண கல்வியை தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் மாற்றப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் வடமாக ஆளுநருடன் எதிர் வரும் வாரங்களில் சந்திப்பதாக குறித்த காலந்துரையாடலில் முடிவெடுக்கப்பட்டது.

குறித்த கலந்துரையாடலில் சொன்ட் நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் செந்தூர் ராஜா, வாழ்நாள் பேராசிரியர் பொன் பாலசுந்தரம் பிள்ளை, வவுனியா பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் மோகனதாஸ், வட மாகாண முன்னாள் மாகாண கல்வி பணிப்பாளர்களான உதயகுமார் மற்றும் ஜோன் குயின்ரஸ், எந்திரி சூரிய சேகரம் கல்வி ஆலோசனைக் குழு உறுப்பினர் சச்சிதானந்தம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# பலாலி காணி விடுவிப்பு தொடர்பில் கொழும்பில் நடைபெற்ற விசேட கலந்துரையாடல்




**- ந.லோகதயாளன்**

யாழ்ப்பாணம் வலி.வடக்கு பாதுகாப்பு வலயத்திற்குள் அமைந்துள்ள தனியார் காணிகளை விடுவிக்கும் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்கும், அது தொடர்பான சவால்களுக்குத் தீர்வு காண்பதற்கும், பாதுகாப்பு பிரதானிகளின் பங்கேற்புடன் விசேட கலந்துரையாடல் ஒன்று 28ம் திகதி செவ்வாய்கிழமையன்று நடைபெற்றது.

இது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில், பாதுகாப்புப் பிரதி அமைச்சர் மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) அருண ஜயசேகர தலைமையில் கொழும்பில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புச் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் (ஓய்வுபெற்ற) சம்பத் துய்யாகொந்த உட்பட சிரேஷ்ட பாதுகாப்பு மற்றும் நிர்வாக அதிகாரிகள் பலரும் இதில் கலந்துகொண்டனர்.

காணிகளை மீளக் கையளிக்கும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள செயற்பாட்டு மற்றும் நிர்வாகத் தடைகளைத் தீர்ப்பதில் இந்தக் கலந்துரையாடலின் பிரதான கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், இன்னும் இராணுவத்தின் வசம் உள்ள தனியார் காணிகளை உரிமையாளர்களிடம் கையளிப்பதை துரிதப்படுத்துவதற்காக, அந்த இராணுவப் பிரிவுகளை கட்டம் கட்டமாக அகற்றுவது குறித்தும் மீளாய்வு செய்யப்பட்டது.

அதன்படி, சிவில் சொத்துக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளைக் குறைக்கும் வகையிலும், அத்தியாவசிய பாதுகாப்புப் பிரிவுகளைத் தொடர்ந்து பேணி, பிரதேசத்தின் தொடர்ச்சியான பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையிலும், புதிய எல்லைகளை நிறுவுவதை நிறைவு செய்வது குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இந்தச் செயல்முறை வெளிப்படையானதாகவும், நியாயமானதாகவும் இருக்க வேண்டும் என்றும், தேசிய பாதுகாப்புடன் முழுமையாகப் பொருந்திப் போக வேண்டும் என்றும் இதன்போது வலியுறுத்தப்பட்டது.


# Thana Insurance Inc

## T20 INSURANCE

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | T20 | 17 | 15 | 18 | 15 | 20 | 17 | 27 | 21 | 43 | 30 | 69 | 49 |
| 500K | T20 | 30 | 22 | 31 | 22 | 32 | 24 | 46 | 35 | 73 | 54 | 126 | 85 |
| 1MILL | T20 | 54 | 36 | 55 | 38 | 56 | 42 | 86 | 62 | 139 | 100 | 244 | 164 |

## PERMANENT LIFE INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | WL | 82 | 71 | 100 | 86 | 123 | 106 | 152 | 131 | 197 | 166 | 238 | 209 |
| 500K | WL | 192 | 164 | 232 | 202 | 295 | 251 | 368 | 316 | 480 | 407 | 587 | 513 |

## NON MEDICAL INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 25K | WL | 38 | 34 | 47 | 40 | 55 | 49 | 76 | 75 | 106 | 84 | 148 | 105 |
| 50K | WL | 69 | 62 | 89 | 75 | 104 | 93 | 147 | 123 | 206 | 162 | 290 | 205 |
| 100K | WL | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 319 | 475 | 405 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | | 40 | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | T20 | 20 | 17 | 28 | 22 | 41 | 34 | 78 | 57 | 131 | 88 | 233 | 157 |
| 200K | T20 | 33 | 30 | 50 | 38 | 78 | 63 | 150 | 108 | 257 | 171 | 460 | 307 |

Thana Manickavasagar
Insurance Broker



THANA INSURANCE Inc.

Web : www.thana.ca
E-mail : thana7@gmail.com
Address : 80 Nashdene Road , unit D218, Scarborough, ON,M1V 5E4

Cell : 416-728-5772
Office : 416-519-3896

"WE DO 100% ONLINE SERVICES,24/7."

# யாரை? எந்தக் குற்றச்சாட்டின் அடிப்படையில்? கைது செய்வது என்ற தெரிவு



**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**

"ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் அரசாங்கம் உடன்படவில்லை. நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அந்த வாய்ப்பை பயன்படுத்தி, நாட்டு மக்களின் உரிமைகள் மற்றும் நல்வாழ்வைத் தேசிய நெறிமுறைகளினூடாக உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கின்றது... வெளிப்புற நடவடிக்கைகள் நாட்டில் மேலும் பிளவுகளை ஏற்படுத்தும், அந்த செயன்முறையானது, உள்ளக செயற்பாடுகளுக்கு இடையூறாக அமையும். இந்த விடயங்களின் அடிப்படையிலேயே சர்வதேச விசாரணைகளை அரசாங்கம் எதிர்க்கின்றது... அந்தவகையில் நம்பகமான உள்நாட்டு பொறிமுறையினூடாக, பொறுப்புக்கூறல் செயற்பாடுகளை முன்னேற்றுவதற்கு அரசாங்கம் உறுதி பூண்டுள்ளது...

இவ்வாறு தெரிவித்திருப்பவர் பிரதமர் ஹரிணி அமரசூரிய. கடந்த 24 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதில் வழங்கும் போது, ஹரிணி மேற்கண்டவாறு பதில் கூறியுள்ளார்.

ஹரிணி. தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் உள்ள ஒப்பீட்டளவில் ஜேவிபி பாரம்பரியத்தில் வராத, லிபரல் என்று கருதப்படும் ஒரு புத்திஜீவி. அவருடைய கருத்தே இதுதான் என்றால் ஜேபிபியின் கருத்து எப்படியிருக்கும்?

உள்நாட்டு நீதியைப் பற்றிய உரையாடல் எங்கிருந்து தொடங்குகிறது? தமிழ் மக்கள் பன்னாட்டு நீதி விசாரணை வேண்டும் என்று கேட்பதினால்தான் அரசாங்கம் அவ்வாறு கூறுகிறது. தமிழ் மக்கள் ஏன் பான்னாட்டு நீதிப் பொறிமுறையைக் கேட்கின்றார்கள்? ஏனென்றால் உள்நாட்டு நீதிப் பொறிமுறையின் மீது அவர்கள் நம்பிக்கை இழந்து விட்டதனால்தான் அவ்வாறு கேட்கிறார்கள்.

தமிழ் மக்கள் மட்டும் உள்நாட்டு விசாரணை பொறிமுறை மீது நம்பிக்கை இழக்கவில்லை. முழு நாடுமே இலங்கைத் தீவின் நீதிபரிபாலனக் கட்டமைப்பின் மீதும் பொலிஸின் மீதும் நம்பிக்கை இழந்துவிட்டது என்பதைத்தான் அண்மையில் நிகழ்த்தப்பட்ட களஆய்வு முடிவுகள் வெளிப்படுத்தியிருப்பதாக லஞ்சம் ஊழல் தொடர்பான முறைப்பாடுகளை விசாரிப்பதற்கான ஆணைக் குழுவின் தலைவர் அண்மையில் தெரிவித்திருந்தார். அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட இந்த ஆணைக் குழுவின் தலைவர் அண்மையில் கொழும்பில் கருத்து தெரிவிக்கும் போது, நாட்டில் உள்ள 10 அரச நிறுவனங்கள் மீது பொதுமக்கள் நம்பிக்கையிழந்து விட்டதாகக் குறிப்பிடுகிறார். அந்த பத்து நிறுவனங்களில் முதலாவதாக போலீஸ் காணப்படுகிறது. அந்த 10 நிறுவனங்களில் ஒன்றாக நீதிபரிபாலான கட்டமைப்பும் காணப்படுகின்றது. இவ்வாறு நாட்டில், மக்கள் மத்தியில் லஞ்சம், ஊழல், மோசடி போன்ற குற்றச்சாட்டுகள் காரணமாக மதிப்பிழந்துபோன அரசுத் திணைக்களங்களை வைத்துக்கொண்டு உள்நாட்டு விசாரணைப் பொறிமுறைமூலம் பொறுப்புக் கூறலை முன்னெடுக்கப் போவதாக அரசாங்கம் கூறி வருகின்றது.

இத்தனைக்கும் 2015ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நிறைவேற்றப்பட்ட நிலைமாறுகால நீதிக்கான ஐநா தீர்மானமானது உள்நாட்டு விசாரணை பொறிமுறையின் போதாமையை ஏற்றுக்கொண்டதன் விளைவுதான். உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை போதுமாக இருந்தால் ஏன் நிலை மாறு கால நீதி என்ற ஐநாவின் ஏற்பாட்டைக் குறித்து சிந்திக்க வேண்டி வந்தது? நிலை மாறுகால நீதி என்பது தமிழ் நோக்கு நிலையில் பலவீனமானது. அது வென்றவர்களால் தோற்றவர்களுக்கு வழங்கப்படும் ஒரு நீதியாகத்தான் உலகம் முழுவதும் நடைமுறையில் உள்ளது. இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னரான நுரம்பேர்க் தீர்ப்பாயத்தில் தொடங்கி கம்பூச்சியாவின் விசேஷ தீர்ப்பாயங்கள் வரையிலும் எல்லாவற்றிலும் நிலைமாறு கால நீதி என்பது நடைமுறையில், வெற்றி பெற்றவர்கள் தோற்றவர்களுக்கு வழங்கும் நீதியாகவே காணப்படுகிறது.

எனினும் இலங்கைத் தீவில் பொறுப்புக் கூறக்கான அதாவது நிலை மாறுகால நீதிக்கான தீர்மானம் எனப்படுவது ஒரு வகையில் இலங்கைத் தீவின் உள்நாட்டு விசாரணை பொறிமுறையின் போதாமையின் விளைவுதான். ஏனென்றால் உள்நாட்டு நீதி விசாரணைப் பொறிமுறை பொருத்தமானதாக இருந்திருந்தால் ஏன் ஐநாவின் ஏற்பாடாகிய நிலை மாறு கால நீதியைக் குறித்துச் சிந்திக்க வேண்டி வந்தது? உள்நாட்டு நீதிப் பொறிமுறையின் இயலாமை அல்லது போதாமையின் விளைவுதான் நிலை மாறு கால நீதி என்ற ஐநா ஏற்பாடு ஆகும்.

அப்பொழுது இருந்து ரணில் மைத்திரி அரசாங்கம் நிலைமாறு கால நீதிக்கான ஐநாவின் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டு இணை அனுசரணை வழங்கியது. அப்பொழுது அவர்கள் ஹைபிரிட் விசாரணைக் கட்டமைப்புக்கு ஒப்புக்கொண்டார்கள். ஆனால் இப்பொழுது முழுக்க முழுக்க உள்நாட்டு விசாரணை பொறிமுறைதான் என்று தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கூறுகிறது.

அனுர அரசங்கமானது கடந்த ஓராண்டு காலத்துக்குள் நூற்றுக்கணக்கானவர்களைக் கைது செய்திருக்கின்றது. இந்தக் கைது நடவடிக்கைகளுக்குள் முன்னாள் ஜனாதிபதியும் உட்பட முக்கிய அரசியல்வாதிகள், படைத்தரப்பு பிரதானிகள், காவல்துறை பிரதானிகள், பாதாள உலகத்தவர்கள், போதைப்பொருள் குற்றவாளிகள் போன்ற பல வகையினரும் அடங்குவர். அண்மை மாதங்களாக அரசாங்கம் போதைப் பொருள் குற்றங்களுக்கு எதிராகவும் பாதாள உலகக் குற்றவாளிகளுக்கு எதிராகவும் நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளது. பாதாள உலகக் குற்றக் கும்பல்களோடு தொடர்புடைய இ'ாரி செவந்தி என்ற பெண் நேபாளத்தில் வைத்து கைது செய்யப்பட்டிருக்கிறார். இவரோடு தமிழர்களும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் கொடுத்த தகவல்களின் அடிப்படையில் அரியாலை, கிளிநொச்சி ஆகிய இடங்களில் மேலும் சிலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். செவ்வந்தியின் கைது நடவடிக்கையின் பின்னரான செய்திகளைத் தொகுத்துப் பார்த்தால் ஒரு விடயம் தெளிவாகத் தெரிகிறது. சிங்களப் பாதாள உலகக் கும்பல்கள் வடக்குக் கிழக்குக்கும் விரிவடைந்துவிட்டன. இதில் தமிழர்களும் சம்பந்தப்படுகிறார்கள்.

செவ்வந்தியோடு கைது செய்யப்பட்ட ஒரு பெண் தென்மராட்சியைச் சேர்ந்தவர். அவர் போரால் பாதிக்கப்பட்ட ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர் என்று கூறப்படுகின்றது. அவருடைய பெற்றோர் ஆயுதப் போராட்ட காலகட்டத்தில் அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டவர்கள். பின்னர் விடுதலை செய்யப்பட்டவர்கள். இந்த பின்னணிக்குள்தான் அந்தப் பெண் வளர்ந்திருக்கிறார். அதாவது பாதிக்கப்பட்ட குடும்பம். தன் சொந்த திருமண வாழ்விலும் அவர் பாதிக்கப்பட்டிருக்கிறார். அதனால் வெளிநாடு போவதற்கு முயற்சித்து இருக்கிறார்.

தமிழ் மக்கள் சட்டவிரோதமாக புலம்பெயர்வதற்கு உதவும் ஏஜென்ட்கள் பெருமளவுக்கு பாதாள உலகத்துடன் தொடர்புடையவர்கள்தான். போர்க்காலத்திலும் அதுதான் நிலைமை. 2009க்குப்பின்னரும் அதுதான் நிலைமை. தென்மாராட்சியைச் சேர்ந்த பெண்ணும் அந்த அடிப்படையில்தான் பாதாள உலகத்துடன் சம்பந்தப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. ஏற்கனவே பயங்கரவாத தடைச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட ஒரு குடும்பத்துக்குள் இருந்து வந்தவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

செவ்வந்தி கைது செய்யப்பட்ட பின் கிடைக்கும் செய்திகளின் அடிப்படையில் பார்த்தால் சிங்களப் பாதாள உலகக் கட்டமைப்பு தமிழ்ப் பகுதிகளுக்கும் விரிவடைந்து விட்டது. இது தற்செயலானதா அல்லது திட்டமிட்டு முன்னெடுக்கப்படுவதா?

பாதாள உலகக் குற்றவாளிகள் மற்றும் போதைப்பொருள் குற்றவாளிகளின் கட்டமைப்புகள் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை. அதுமட்டுமல்ல இவற்றுக்குள் முன்னாள் படைவீரர்கள் இப்பொழுதும் சேவையில் இருக்கும் படையாட்கள், அரச உயர் அதிகாரிகள், அரசியல்வாதிகள் போன்ற பலரும் அடங்குவர் என்று தெரிகிறது. உதாரணமாக அண்மையில் வெளிவந்த ஒரு செய்தியின்படி, மல்லாவியில் உள்ள படை முகாம் ஒன்றைச் சேர்ந்த ஒரு படை அதிகாரி படையினருக்கு கொடுக்கப்பட்டரவைகளை குற்றக் கும்பல்களுக்கு விற்றிருக்கிறார் என்று கூறப்பட்டது. செவ்வந்தி கைது செய்யப்பட்ட பின் நடந்த விசாரணைகளின்போது முன்னாள் படை வீரர்கள் பாதாள உலகங்களோடு சம்பந்தப்படுவது தொடர்பான தகவல்கள் வெளிவந்தன.

மேலும், கைது செய்யப்பட்ட ஒரு பாதாள உலகத் தலைவருக்கு சொந்தமான சொகுசுப் பேருந்துகளுக்கான வழித்தட அனுமதியை ஓர் உயர் அதிகாரி லஞ்சம் பெற்றுக் கொண்டு வழங்கியிருந்தமையும் தெரியவந்தது. கைது நடவடிக்கைகள் நடந்து கொண்டிருந்த காலப்பகுதியிலும் அவருக்கு அதற்குரிய மாதாந்த லஞ்சம் வழங்கப்பட்டு வந்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. அதாவது குற்றக் கும்பல்கள் பல்வேறு மட்டங்களிலும் தொடர்புபட்டிருப்பது தெரியவந்துள்ளது.

ஆனால் தமிழ் நோக்கு நிலையில் அதைவிட ஆழமாகக் கவனிக்கப்பட வேண்டியது என்னவென்றால், இந்தக் குற்றக் கும்பல்கள் தமிழ்ப் பகுதிகளுக்கும் விரிவடைந்துள்ளன என்பதுதான். இது இயல்பான ஒரு வளர்ச்சி அல்ல. திட்டமிட்டு அரசியல் உள்நோக்கத்தோடு முன்னெடுக்கப்பட்ட ஒன்று என்று கஜேந்திரகுமார் போன்ற அரசியல்வாதிகள் குற்றம் சாட்டுகிறார்கள். போரில் தோற்கடிக்கப்பட்ட தமிழர்களை அரசியல் ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும், பண்பாட்டு ரீதியாகவும் தோற்கடிப்பதற்கு போதை ஒரு உபகரணமாக பயன்படுத்தப்படுகிறது என்பது தமிழ்த்தேசிய அரசியல்வாதிகள் பொதுவாக முன்வைக்கும் ஒரு குற்றச்சாட்டு ஆகும். கடந்த 23 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் கஜேந்திரக்குமார் அதுதொடர்பாக விரிவாகப் பேசியிருக்கிறார்.

தமிழ் இளையோரை இலட்சிய வாதத்தின் பக்கம் போகவிடாமல் தடுப்பதற்கு போதை ஓர் உபகரணமாகப் பயன்படுத்தப்படுகிறது. சாகசப் பண்புமிக்க குற்றக் கும்பல்களும் அந்த நோக்கத்தோடு தமிழ் இளையோரை நெருங்கி வருகின்றன. இதன்மூலம் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள இளைய தலைமுறையானது திட்டமிட்டுப் போதையில் மூழ்கடிக்கப்படுகிறது. இது கட்டமைக்கப்பட்ட இனஅழிப்பின் கீழ் முன்னெடுக்கப்படுகின்ற ஒரு நடவடிக்கை என்று தமிழ் அரசியல்வாதிகள் குற்றம்சாட்டி வருகிறார்கள்.

இப்படிப்பட்டதோர் பின்னணியில், பாதாள உலக கும்பல்களுக்கும் போதை பொருள் குற்றவாளிகளுக்கும் எதிரான அரசாங்கத்தின் நடவடிக்கைகள் விறுவிறுப்பான காட்சிகளாக மக்கள் முன்வைக்கப்படுகின்றன. குற்றக் கும்பல்களுக்கு எதிரான மேற்படி நடவடிக்கைகள் தொடர்பான செய்திகளை தமிழ் மக்களிலும் ஒரு பகுதியினர் ஆர்வத்தோடு ரசித்து வருகிறார்கள்.

சிங்களப் பகுதிகளில் பாதாள உலக கும்பல்களையும் போதைப்பொருள் கட்டமைப்பையும் அரசாங்கம் முடக்கி வருவது வரவேற்கத்தக்கது. அதை யார் செய்தாலும் பாராட்ட வேண்டும். ஆனால் இது போன்ற நடவடிக்கைகளின் மூலம் அரசாங்கம் உள்நாட்டு நீதி விசாரணைக் கட்டமைப்பும் போலீஸ் கட்டமைப்பும் நம்பகத்தன்மை உள்ளவை என்று நிரூபிக்கப் போகின்றது. அதாவது உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையின் நம்பகத்தன்மையை நிரூபிப்பதற்கு மேற்படி கைது நடவடிக்கைகள் உதவும் என்பதுதான்.

ஏற்கனவே செம்மணிப் புதை குழியுமுட்பட மனிதப் புதை குழிகளை அகழும் விடயத்தில் அரசாங்கம் தடைகள் எதையும் ஏற்படுத்தவில்லை என்ற ஒரு அபிப்பிராயம் அனைத்துலக அளவில் உண்டு. இக்கட்டுரை எழுதப்படும் வரையிலும் செம்மணி அகழ்வின் அடுத்த கட்டத்திற்கு உரிய நிதி வழங்கப்படவில்லை. மழைக்காலம் என்பதனால் அப்பகுதியில் நீர் நிறையும் ஆபத்தும் உண்டு. ஆனாலும், அரசாங்கம் மனிதப் புதை குழிகளின் விடயத்தில் உள்நாட்டு நிதியின் நம்பகத்தன்மையை நிரூபிக்கும் விதத்தில்தான் நடந்து கொள்ளும் என்று எதிர்பார்க்கலாம்.

**(தொடர்ச்சி 9 பக்கம்)**

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வலிகாமம் கிழக்கு பிரதேச சபை எல்லைக்குள் நுண்பாகநிதி நிறுவனங்களின் அத்துமீறல், அடாத்து வட்டியாளர்களுக்கு எதிராக அவசர அவசர தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது



நுண்பாக நிதி நிறுவனங்களின் அத்துமீறிய செயற்பாடுகளையும் அடாத்தான வட்டிக்கு நிதி வழங்குபவர்களையும் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை விரைவாக எடுக்கவேண்டும் என வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் ஒக்டோபர் மாத அமர்வு தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தலைமையில் 28ம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இதில் அவசர நடவடிக்கைக்கான பிரேரணையாக சபையின் உறுப்பினர் ஐங்கரன் இராமநாதனால் மேற்படி பிரேரணை முன்வைக்கப்பட்டது.

கடந்த சபையில் நுண்பாக நிதி நிறுவனங்களின் அத்துமீறிய செயற்பாடுகள் தொடர்பாக அவரால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையில், வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் ஆட்சி எல்லைக்கு உட்பட்ட கிராமங்கள் தோறும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதன் மூலம் நிதிநிறுவனங்கள் சட்டம் ஒழுங்கு அந்நிறுவனங்கள் வரையரைக்குப் புறம்பாக செயற்படுவது நீண்ட முயற்சியினால் மட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டன.

தற்போதைய நிலையில் மீளவும் கிராமங்கள் தோறும் நுண்நிதிக்கடன் வழங்குனர்கள் பெண் தலைமைத்துவக் குடும்பங்களை இலக்கு வைத்து வீடு வீடாகச் சென்று நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். இவ்வாறாக ஈடுபடுவதன் வாயிலாக பல்வேறுபட்ட பிரச்சினைகள் ஏற்படுகின்றன. நாட்டின் நடைமுறையில் உள்ள நிதி சார் சட்டம் ஒழுங்குகளின் வாயிலான கடப்பாடுகளை பூர்த்திசெய்யாது அவற்றினை அந் நிறுவனங்கள் மீறிவிடுகின்றனர். இதனால் பெரும் இன்னல்களுக்குள் கிராமப்புறப் பெண்கள் தள்ளப்பட்டு விடுகின்றனர். பிரதேச சபை நடைமுறையில் செயற்படும் நிதி நிறுவனங்களின் செயற்பாடுகளை கிராமங்களுக்குள் கண்காணிக்க வேண்டும். அவற்றின் அத்துமீறல்கள் தொடர்பாக உடன் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என சபை உறுப்பினரின் தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டது. மேலும் மீற்றர் வட்டியாளர்களை சட்டத்தின் முன்நிறுத்தவும் வேண்டும். இந் நடவடிக்கைகளை தன்னால் கடந்த சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தின் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தவேண்டும் எனவும் உறுப்பினர் ஐங்கரன் இராமநாதனால் தீர்மானம் முன்வைக்கப்பட்டது.

இவ்விடயத்தில் உடனடி இடர்நிலையாகக் கருதி பிரதேச சபை உச்ச அளவில் செயற்படாவிடில் அப்பாவிகளை பாதுகாக்க முடியாதுபோகும் என்பதுடன் அநியாயமாக பலர் தவறானமுடிவுகளைக்கூட எடுக்கத்தள்ளப்படும் நிலை ஏற்படும். உடனடியாக இத் தீர்மானத்தினை முன்கொண்டு செல்லத்தக்க செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்த உறுப்பினர் ஐங்கரன் இராமநாதனால் கோரப்பட்டது.

இத் தீர்மானத்தின் மீது உப தவிசாளர் ஜனார்த்தனன் உரையாற்றுகையில் மக்கள் தெளிவின்றி ஆடம்பரத்தேவைகளுக்காக முறைகேடான கடன்களைப் பெற்று பாரிய இடருக்கள் இகப்பட்டுள்ள நிலையில் அதுதொடர்பில் உடனடி நடவடிக்கைகளுக்காக சகல தரப்புக்களும் ஒன்றினைய வேண்டும் என்றார்.

இந் நிலையில் இத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட நிலையில் விரைவான செயற்றிட்டங்களை வகுத்து செயற்படுத்தவதற்கான ஒழுங்களை கடந்த காலத்தில் இச் சபையில் மேற்கொள்ளப்பட்டமை போன்று தற்போதைய சபையில் முன்வைக்கப்பட்டுள்ள மேலதிகத் தீர்மானத்தினையும் அடிப்படையாகக் கொண்டு விரைவான நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தவிசாளர் தி.நிரோஷ் அறிவித்தார்.

# நிதி பிரச்சினை தொடர்பாக நீதிமன்றம் செல்லவுள்ள பருத்தித்துறை நகரசபை — சபைக்கூட்டத்தில் ஏகமனதான தீர்மானம் நிறைவேற்றம்!



பருத்தித்துறை நகரசபையினாரால் பணியாளருக்கு வழங்கப்படவேண்டும் என்ற 40 வீத சம்பள அதிகரிப்பானது நிதியின்மை காரணமாக வழங்க முடியாதுள்ளதாகவும் இதனால் நீதிமன்றை நாடுவதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சபை அமர்வானது பருத்தித்துறை நகர சபையின் மாதாந்த அமர்வு அதன் தவிசாளர் வின்சன் டீ போல் டக்ளஸ் போல் தலமையில் 30ம் திகதி வியாழன் அன்று காலை 9:15 மணியளவில் ஆரம்பமானது.

வீதிகளின் ஓரங்களை செப்பனிடுதல், வீதி விளக்குகளை விரைவாக பொருத்துதல், நகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அறநெறி பாடசாலைகள் உருவாக்குவதை ஊக்கிவித்தல், இலங்கை போக்கு வரத்து சபைக்கு நவீன சந்தை தொகுதி அமைந்துள்ள பகுதியில் அலுவலகம் ஒன்றினை அமைத்துக் கொடுத்தல், வாடகை முச்சக்கர வண்டிகளை ஒழுங்குபடுத்துதல், வரி அறவிடுதல், நவீன சந்தைப்பகுதியில் தனியார், அரச பேருநதுகளை தரிப்பிடம், போன்றவற்றை பருத்தித்துறை போலீசார் கண்காணித்தல், சபை தீர்மானங்களை ஒழுங்கமைத்தல், நவீன சந்தை பகுதியின் மேல் பகுதி மழை நீர் ஒழுக்கு ஏற்படுவதாகவும் அதனை நிரந்தர தீர்வாக எட்டுவதற்குரிய நடவடிக்கை எடுத்தல் என்பன தொடர்பாக இன்றைய அமர்வில் கலந்துரையாடப்பட்டது.

ஊழியர்களுக்கான 40 வீதமான கொடுப்பனவு அதிகரிப்பானது வழங்கவேண்டும் என்று வழங்கப்பட்ட சுற்றுநிரூபம் தொடர்பாக ஆராயப்பட்டு, அதனை வழங்குவதற்குரிய நிதி சபையிடம் இல்லை என்றும் இதனால் மத்திய அரசின் சுற்றுநிருபத்தை மன்றினூடாக ரிட் சவாலுக்கு உட்படுத்துவதென்றும் ஆராயப்பட்டது.

# இணையவழி வாசிப்பை ஊக்குவிக்கும் வகையில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் ஏற்பாடு செய்யப்பெற்ற ஒன்றுகூடல்!



வாசிப்பு மாதத்தையொட்டி கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் முன்னெடுக்கப்பட்டுவரும் நிகழ்வுகள் வரிசையில் 29ம் திகதி புதன்கிழமை அன்றைய நிகழ்வு இணைய வழி வாசிப்பை ஊக்குவிப்பதாக முன்னெடுக்கப்பட்டது.

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்வி அமைச்சில் செயற்படுத்தப்படும் Room to Read செயற்றிட்டத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் காரைக்கவி கந்தையா பத்மானந்தன் அதிதி பேச்சாளராக கலந்து கொண்டார்.

இணைய வழி அறிவுத் தேடலின் முக்கியத்துவம் பற்றிய ஆவணக் காணொளியை விசேட கல்வி ஆசிரிய மாணவி நுஸ்லா சாஜஹான் காட்சிப்படுத்தினார்.

தமிழ்த்துறை விரிவுரையாளர் வேல் நந்தகுமார் அதிதிக்கான அறிமுக உரையை ஆற்றினார்.

இணைய வழி வாசிப்பு என்ற தலைப்பில் இரண்டாம் வருட உடற்கல்விநெறி ஆசிரிய மாணவி உசாந்தினி விமல்ராஜ் உரை ஆற்றினார்.

வாசிப்பை ஊக்குவிக்கும் விதமாக அனைவருக்கும் நூல்களை அன்பளிப்பாக வழங்கினார்.

அதிதி காரைக்கவி கந்தையா பத்மானந்தன் அவர்கள் கலாசாலை முகாமைத்துவ குழுவினரால் பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டார்.





(8 பக்கத் தொடர்ச்சி)

## யாரை? எந்தக் குற்றச்சாட்டின் அடிப்படையில்? கைது செய்வது என்ற தெரிவு

அவ்வாறு உள்நாட்டு நீதியின் நம்பகத்தன்மையை நிரூபிக்கும் விடயத்தில் அரசாங்கம் தொடர்ந்து முன்னேறுமாக இருந்தால் தமிழ் மக்கள் கேட்பதுபோல பன்னாட்டு விசாரணைப் பொறிமுறை தேவையில்லை உள்நாட்டு விசாரணை பொறிமுறையே போதும் என்று அவர்கள் கூறத் தொடங்குவார்கள்.

ஏற்கனவே கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் தங்களுக்கு ஆணை வழங்கியிருப்பதாக அரசாங்கம் கூறிவருகின்றது. இப்பொழுது போதைப் பொருள் மற்றும் பாதாள உலகக் குற்றக் கும்பல்களுக்கு எதிரான அரசாங்கத்தின் விட்டுக் கொடுக்கப்பற்ற நடவடிக்கைகள் காரணமாக அரசாங்கம் உள்நாட்டு நீதியின் நம்பகத்தன்மையை மேலும் பலப்படுத்தி வருகின்றது. குற்றக் கும்பல்களுக்கு எதிரான அரசாங்கத்தின் கைது நடவடிக்கைகளை சமூக வலைத்தளங்களிலும் இலத்திரனியல் ஊடகங்களிலும் விறுவிறுப்பான மர்மப் படங்களைப் பார்ப்பதுபோல தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் பார்த்து ரசித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்குத் தெரியவில்லை, இந்தக் கைது நடவடிக்கைகள் எல்லாவற்றின் மூலமும் அரசாங்கம் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையின் நம்பகத்தன்மையை படிப்படியாகக் கட்டியெழுப்பி வருகிறது என்பதுதான்.

ஆனால் கடந்த ஓராண்டுக்கும் மேலாக அரசாங்கம் கைது செய்திருப்பவர்களில் யார் மீதும் போர்க் குற்றம் தொடர்பாகவோ அல்லது இனமுரண்பாடு தொடர்பாகவோ குற்றச்சாட்டுக்கள் எவையும் முன்வைக்கப்படவில்லை. பயங்கரவாதத் தடைச் சட்டமும் வாக்குறுதி அளித்தபடி நீக்கப்படவில்லை. அதாவது எந்தக் குற்றங்களுக்கு எதிரான நடவடிக்கை என்ற விடயத்தில் அரசாங்கத்திடம் தெளிவான ஒரு தெரிவு உண்டு.எந்தக் குற்றங்களை விசாரிக்கக் கூடாது என்ற தெரிவு இருக்கின்றதே அதுதான் தமிழ்மக்கள் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையின் மீது நம்பிக்கை வைக்காததற்கு காரணம்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# யாழ்ப்பாணத்தில் ஹெரோயின் போதை மருந்துடன் நான்கு இளைஞர்கள் கைது!

பு. கஜிந்தன்

30ம் திகதின்றையதினம் வியாழக்கிழமை யாழ்ப்பாணம் மணியந்தோட்டம் பகுதியில் நான்கு சந்தேகநபர்கள் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டுள்ளனர். இதன்போது அவர்களிடமிருந்து 2 கிராம் 540 மில்லிகிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், யாழ்ப்பாணம் பொலிஸ் போதை தடுப்பு பிரிவினரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ்ப்பாணம் – சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயத்தின் நிறுவுனர் நினைவு நாளும், பரிசளிப்பு விழாவும் சிறப்பாக நடைபெற்றன!



சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயத்தின் நிறுவுனர் நினைவு நாளும், பரிசளிப்பு விழாவும், 115வது ஆண்டு விழாவும் 29ம் திகதி புதன்கிழமை அன்றையதினம் பாடசாலையின் மண்டபத்தில் இடம்பெற்றது.

விருந்தினர்கள் மாலை அணிவித்து விழா மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டனர். அதனைத் தொடர்ந்து மங்கல விளக்கேற்றல் இடம்பெற்றது. தொடர்ந்து இறை வணக்கம், வரவேற்புரை, தலைமையுரை, விருந்தினர்கள் உரைகள், மாணவர்களது கலை நிகழ்வுகள், விருந்தினர்களுக்கான நினைவுச் சின்னங்கள் வழங்கல் மற்றும் பரிசில்கள் வழங்கல் என்பன இடம்பெற்றன.





மேலும் இன்றைய நிகழ்வின் போது அதிபர்கள் தினமும் கடைப்பிடிக்கப்பட்டதுடன், ஆறுமுக அரும்புகள் சஞ்சிகை வெளியீடும், சிறுவர் விளையாட்டு முற்றம் திறப்பு நிகழ்வும் இடம்பெற்றது.

பாடசாலையின் முதல்வர் எம்.சி. சுதாகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரியின் பணிப்பாளர் ஆறுமுகம் நற்குணேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக சிரேஷ்ட சட்டத்தரணி சோ. தேவராஜாவும், கௌரவ விருந்தினர்களாக முன்னாள் அதிபர்களான ந. பாலச்சந்திரன், சி. திவாகரனும் ஆகியோரும் கலந்து சிறப்பித்ததுடன் நிறுவுனர் நினைவுப் பேருரையை சட்டத்தரணி மு. தர்சிகா ஆற்றினார்.

இந்த விழாவில் ஆசிரியர்கள், அயற்பாடசாலை அதிபர்கள், அயற்பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர் மற்றும் நலன்விரும்பிகள் என பலரும் கலந்துகொண்டனர்.



# யாழ்ப்பாணத்தில் ஒப்பந்த காலம் நிறைவடைந்தும் வெளியேறாத தனியார் நிறுவனம் – மீனவர்கள் சங்கத்தினர் போராட்டம்!

ஒப்பந்த காலம் நிறைவடைந்தும் வெளியேறாமல், தம்பாட்டி கடற்றொழில் கிராமிய அபிவிருத்தி சங்கத்தின் கட்டடத்தில் இருந்து தமது செயற்பாடுகளை முன்னெடுக்கும் தனியார் நிறுவனத்தை உடனடியாக வெளியேறுமாறு கோரி தம்பாட்டி கிராமிய கடற்றொழில் அபிவிருத்தி சங்கத்தினர் 30ம் திகதி வியாழக்கிழமை அன்றையதினம், குறித்த கட்டடத்திற்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பதாகைகளை ஏந்தி, "தனியார் நிறுவனமே உடனடியாக வெளியேறு, எங்கள் வீட்டில் உங்கள் ஆட்சியா, ஒப்பந்தகாலம் நிறைவடைந்தும் வெளியேறாமல் இருப்பது அராஜகமான செயற்பாடா, மீனவர்களின் வயிற்றில் அடிக்காதே, எமது கட்டடம் எமக்கு வேண்டும், மீனவர்களுக்கு அநீதி இழைக்காதே" போன்ற கோஷங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது குறித்து, போராட்டத்தில் ஈடுபட்ட தம்பாட்டி கடற்றொழில் கிராமிய அபிவிருத்தி சங்கத்தினர் கருத்து தெரிவிக்கையில், எமது சங்க கட்டடமானது கடந்த நிர்வாகத்தால் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு 5 வருடகால ஒப்பந்தத்துக்கு வழங்கப்பட்டது. 2018ஆம் ஆண்டு வழங்கப்பட்ட நிலையில் 2023ஆம் ஆண்டு ஒப்பந்தம் நிறைவடைந்துள்ளது. ஒப்பந்தகாலம் நிறைவடைந்து 2 வருடங்கள் கடந்தும் அவர்கள் வெளியேறவில்லை.

வேறொரு நிறுவனமானது எம்மிடம் வந்து 80பேருக்கு வேலைவாய்ப்பும், 10 இலட்சம் ரூபா முற்பணமும், மாதாந்தம் 50ஆயிரம் ரூபா வாடகையும் தருவதாகவும் கூறினார்கள். நாங்கள் அவர்களுடன் கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் ஒப்பந்தமும் செய்துவிட்டோம். ஆனால் ஏற்கனவே எமது கட்டடத்தை பயன்படுத்தும் நிறுவனமானது வெளியேறாத காரணத்தால் புதிதாக ஒப்பந்தம் செய்த நிறுவனம் தமது பணிகளை முன்னெடுக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

புதிய நிறுவனத்தின் வருகையால் எமது பகுதியில் உள்ள பல பெண் தலைமைத்துவ குடும்பங்களுத்து வாழ்வாதாரமும் கிடைக்தவுள்ளது. ஆனால் அதற்கு எல்லாம் வழிவிடாது, ஏதோ ஒரு பின்னணியை வைத்து அந்த நிறுவனம் வெளியேறாமல் இருக்கின்றது.

எமது அனுமதியின்றி எமது கட்டடத்திலும், கட்டடம் அமைந்துள்ள வளாகத்திலும் பல்வேறுவிதமான வேலைகளை செய்கிறனர். உள்ளே என்ன நடக்கின்றது என்று கூட எமக்கு தெரியவில்லை. சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேசியிருந்தோம் இருப்பினும் அவர்களும் எமக்கு தீர்வு வழங்கவில்லை.

குறித்த நிறுவனமாது இதற்கு பின்னரும் வெளியேறாவிட்டால் ஏற்படக்கூடிய விளைவுகளுக்கு நாங்கள் பொறுப்பல்ல. ஏனெனில் அவர்கள் சட்டவிரோதமாக இருக்கின்றார்கள். ஒப்பந்த காலம் நிறைவடைந்த நிலையில் எங்களது சங்கத்தின் வளாகத்தில் எங்களது மக்களுக்கு நன்மை பயக்கும் எந்த செயற்பாட்டையும் நாங்கள் செய்ய முடியும் என்றனர்.



குறித்த போராட்டமானது இடம்பெற்றபோது கட்டடத்தின் உள்ளே இருந்தவர்கள் போராட்டக்காரர்களை அச்சுறுத்தும் வகையில் காணொளி எடுத்ததை அவதானிக்க முடிந்தது.

# செம்மணி புதைகுழிகளுக்கு நீதி வேண்டி யாழ்ப்பாணம் கிறிஸ்தவ ஒன்றியத்தினர் போராட்டம்!





யாழ்ப்பாணம் கிறிஸ்தவ ஒன்றியத்தினர், செம்மணி புதைகுழிக்கு நீதி வேண்டியும், பாதிக்கப்பட்ட மக்களுடன் ஆதரவாக செயற்படுகின்றோம் என்பதை காட்டுகின்ற முகமாகவும் 30ம் திகதி வியாழக்கிழமை அன்றையதினம் செம்மணி பகுதியில் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

செம்மணி புதைகுழி விவகாரத்திற்கு உண்மையான நீதி கிடைக்கப் பெற்று மக்களின் கண்ணீருக்கு விமோசனம் கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

செம்மணி புதைக்குழி அமைந்துள்ள சித்துப்பாத்தி இந்துமயானத்தின் வாயிலில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட போராட்டமானது பேரணியாக செம்மணிச் சந்திவரை சென்றது.

பின்னர் உயிர்நீத்த உறவுகளின் அஞ்சலிக்காக செம்மணியில் அமைந்துள்ள அணையா விளக்கு தூபியடியில் மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதில் பேராயர்கள், கிறிஸ்தவ மத குருக்கள், அருட்சகோதரிகள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களுடன் சிறீதரன் எம்.பி கலந்துரையாடல்!

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவரும், யாழ் தேர்தல் மாவட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன் அவர்கள் உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களை 29ம் திகதி அன்றைய தினம் பாராளுமன்ற உறுப்பினரின் யாழ்ப்பாண மாவட்ட அலுவலகத்தில் மாலை 3.00 மணிக்கு சந்தித்து கலந்துரையாடினார்.

பாராளுமன்றில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள 2026ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்திற்கான பிரேரணைகள், விவாதங்களின் போது உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள், விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

தவிசாளர்களினால் ஆரோக்கியமான கருத்துக்களை தெரிவித்ததுடன் ஒவ்வொரு விடயத்தையும் தனித்தனியாக ஆராய்ந்து உரிய விடயங்களை கேட்டறிந்து கொண்டதுடன் எதிர்கால நடவடிக்கைக்கான விடயங்கள் தொடர்பாகவும் ஒவ்வொரு பிரதேச சபைகளின் தலைவர்களிடமிருந்தும் விபரங்களை பெற்றுக் கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் மிகவும் பயனுள்ளதாகவும், ஆரோக்கியமான கலந்துரையாடல்களாகவும் அமைந்துள்ளது எனக் குறிப்பிட்டார்.

எதிர்காலத்தில் இவ்வாறான சந்திப்புக்கள், கலந்துரையாடல்களை மேற்கொண்டு உள்ளூராட்சி மன்ற செயற்பாடுகளையும் எமது செயற்பாடுகளையும் வெற்றிகரமாக முன்னெடுக்க உதவியாக இது அமையும், என சிறீதரன் எம்.பி தெரிவித்தார்.



# மன்னாரில் கத்தோலிக்க குருவின் உடையில் வந்து நிதி சேகரிப்பில் ஈடுபட்ட நபர் கைது

மன்னார் நிருபர் (31-10-2025)
மன்னார் மாவட்டத்தில் கடந்த 27ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த நபர் ஒருவர் கத்தோலிக்க குருக்கள் அணியும் ஆடையான வெள்ளை அங்கி மற்றும் கறுப்பு பட்டி அணிந்தவராய் தன்னை ஒரு கத்தோலிக்க குருவாக காண்பித்து வீடுகளுக்கு சென்று நிதி சேகரிப்பில் ஈடுபட்டு இருந்தார். முத்தரிப்புத்துறை, வங்காலை போன்ற இடங்களில் அவர் நிதி சேகரிப்பில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது. குறித்த நபர் ஒவ்வொரு இடங்களிலும் வெவ்வேறு விதங்களில் தன்னை அடையாளப்படுத்திக் இருந்தார். சில இடங்களில் கத்தோலிக்க திருச்சபையின் ஒரு துறவற சபையாகிய அமலமரித் தியாகி குரு என்றும் வேறு சில இடங்களில் அங்கிலிக்கன் சபை குரு எனவும் கூறியுள்ளார்.

குறித்த நபர் நானாட்டாவில் உள்ள வங்கி ஒன்றில் பணத்தை வைப்பில் இட்டுள்ளார். அவர் பற்றிய தகவல் மன்னார் பொலிசாருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் நானாட்டானில் இருந்து மன்னார் நகருக்கு அவர் பஸ்ஸில் வந்த வேளையில் மன்னர் பஸ் தரிப்பிடத்தில் வைத்து போலீசார் அவரை கைது செய்தனர்.

பொலிஸ் நிலையத்திற்கு அவரை அழைத்துச் சென்று விசாரித்த போலீசார் அவர் உண்மையான குருவானவர் இல்லை என்பதையும் சிறியதொரு கிறிஸ்தவ சபை உறுப்பினர் என்பதையும் உறுதிப்படுத்தினர்.

அன்றைய தினம் பொலிஸ் தடுப்பில் வைத்த பொலிசார் அடுத்த நாள் இவரை மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் குறித்த நபரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

இதேவேளை இவ்வாறானவர்கள் மட்டில் மக்கள் விழிப்புடன் இருக்குமாறு மன்னார் ஆயர் இல்லம் மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

# திமுக ஆட்சியில் மருத்துவர் இல்லாததால் தொடரும் உயிர்பலி — நயினார் நாகேந்திரன்



தமிழகத்தில் கிராமங்கள்தோறும் ஒன்று மருத்துவர்கள் இருப்பதில்லை அல்லது தகுந்த மருத்துவ வசதிகள் இருப்பதில்லை என தெரிவித்துள்ளார்.

தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது:- ஆரம்ப சுகாதார நிலையத்தில் 3 மணி நேரமாக மருத்துவர்கள் யாரும் இல்லாததால் கடலூர் மாவட்டம் மங்களூரில் பாம்பு கடித்த விவசாயி ஒருவர் பலியாகிய செய்தி மிகுந்த அதிர்ச்சியளிக்கிறது. தமிழகத்தில் கிராமங்கள்தோறும் ஒன்று மருத்துவர்கள் இருப்பதில்லை அல்லது தகுந்த மருத்துவ வசதிகள் இருப்பதில்லை. மருத்துவர்கள் நியமனம் குறித்த கேள்வி எழும்போதெல்லாம் ஏதோ ஒரு எண்ணிக்கையைக் கூறி மழுப்புவதில் மட்டுமே குறியாக இருக்கிறார் சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன். போதிய மருத்துவ வசதிகளின்றி அப்பாவிப் பொதுமக்கள் மடிந்து வரும் வேளையில், "உலகமே போற்றும் மருத்துவக் கட்டமைப்பு இது" என்று மேடைகளில் போலியாக பெருமிதம் கொள்வதற்கு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெட்கப்பட வேண்டும். விளம்பரத் திட்டங்களை அறிவித்து "நலம் காக்கும் ஸ்டாலின்" என்று பெயர்சூட்டி விளம்பரம் தேடுவதற்கு பதில், ஆட்சி முடியும் தருவாயிலாவது மக்கள் உயிரைப் பாதுகாக்கும் விதமாக அடிப்படை மருத்துவ வசதிகளை மேம்படுத்த வேண்டும் திமுக அரசு.



# கேரளாவில் 31.34 லட்சம் மகளிருக்கு மாதம் ரூ.1000 வழங்கப்படும் என முதல்வர் பினராயி விஜயன் அறிவிப்பு

அடுத்தாண்டு கேரளாவில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், முதலமைச்சர் பினராயி விஜயன் பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார். தமிழ்நாட்டை தொடர்ந்து கேரளாவிலும் மகளிருக்கு மாதம் ரூ.1000 வழங்கப்படும் என்று முதலமைச்சர்
பினராயி விஜயன் அறிவித்துள்ளார்.

அரசின் எந்த திட்டத்திலும் பயனாளியாக இல்லாத 35 வயது முதல் 60 வயதுக்குள் உள்ள 31.34 லட்சம் மகளிருக்கு இந்த உதவித்தொகை வழங்கப்படவுள்ளது. இத்திட்டத்திற்கு ஆண்டுக்கு ரூ.3800 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், பிளஸ்-2, ஐடிஐ, டிப்ளமோ அல்லது பட்டப்படிப்புகளை முடித்த பிறகு, திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் அல்லது போட்டித் தேர்வு பயிற்சியில் கலந்து கொள்ளும் பொருளாதாரத்தில் பின்தங்கிய இளைஞர்களுக்கு மாதந்தோறும் ரூ.1,000 உதவித்தொகை வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆண்டு குடும்ப வருமானம் ரூ.1 லட்சத்திற்கும் குறைவாக உள்ள 18 முதல் 30 வயதுடைய இளைஞர்கள் இந்த திட்டத்தில் பலன்பெறலாம். இந்தத் திட்டத்தின் மூலம் சுமார் ஐந்து லட்சம் இளைஞர்கள் பயனடைவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வெங்கட் பிரபு — சிவகார்த்திகேயன் படத்தில் இணையும் "லோகா" பட நடிகை



தமிழ் சினிமாவில் அனைவராலும் கொண்டாடப்படும் நடிகர் சிவகார்த்திகேயன். இவர் தற்போது சுதா கொங்கரா இயக்கத்தில் பராசக்தி திரைப்படத்தில் நடித்து வருகிறார். இப்படம் அடுத்த ஆண்டு பொங்கல் பண்டிகையில் வெளியாக உள்ளது. இதற்கிடையில், இயக்குனர் வெங்கட் பிரபு அடுத்ததாக சிவகார்த்திகேயன் நடிப்பில் புதிய திரைப்படத்தை இயக்கவுள்ளார். வெங்கட் பிரபு இயக்கத்தில் விஜய் நடித்த ""தி கிரேட்டஸ்ட் ஆப் ஆல் டைம்"" படத்தின் உச்சக்கட்ட காட்சியில் சிவகார்த்திகேயன் ஒரு சிறப்புத் தோற்றத்தில் நடித்திருந்தார். இப்படம் ஒரு டைம் டிராவல் கதைக்களத்தில் உருவாக இருக்கிறது.இப்படமும் அவரது பாணியில் நகைச்சுவையாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில், இப்படத்தில் சிவகார்த்திகேயனுக்கு ஜோடியாக "லோகா" பட நடிகை கல்யாணி பிரியதர்'ன் நடிக்கவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. முன்னதாக சிவகார்த்திகேயன் - கல்யாணி இருவரும் "ஹீரோ" என்ற படத்தில் இணைந்து நடித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# மொழி முக்கியமல்ல, நடிக்கும் கதாபாத்திரங்களே முக்கியம் என்கிறார் நடிகை பிரியாமணி

முன்னணி நடிகையான பிரியாமணி தமிழ் தாண்டி தெலுங்கு, மலையாளம், இந்தி, கன்னட படங்களிலும் நடித்து வருகிறார். "பருத்திவீரன்" படத்தில் சிறந்த நடிப்புக்காக தேசிய மற்றும் மாநில அரசின் விருதுகளை பெற்றார். தற்போது முக்கிய கதாபாத்திரங்களில் தலைகாட்டி வருகிறார். இதற்கிடையில் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற பிரியாமணி, பான் இந்தியா படங்கள் குறித்து பேசியது கவனத்தை ஈர்த்துள்ளது. அதில், "அவர்" "பான் இந்தியா" என்ற சொல்லைப் பயன்படுத்துவதை நிறுத்த வேண்டும். நாம் அனைவரும் இந்தியர்கள். அப்படி இருக்கும்போது எதற்காக அந்த வார்த்தை? இந்தி நடிகர் தென்னிந்திய படங்களில் நடித்தால் அவரை தென்னிந்திய நடிகர் என்று சொல்கிறோமா? ரஜினி, கமல், தனு' போன்றவர்கள் பல மொழிகளில் நடிக்கிறார்கள். அவர்களை யாருமே பான் இந்தியா நடிகர்கள் என்று சொல்லவில்லையே. மொழி முக்கியமல்ல, நடிக்கும் கதாபாத்திரங்களே முக்கியம். "பான் இந்தியா" என்ற வார்த்தையை தயவுசெய்து சொல்லாதீர்கள்"", என்றார்.

# சீனப் பொருட்கள் மீதான வரியை 10 சதவீதம் குறைப்பதாக டிரம்ப் அறிவிப்பு



5 நாட்கள் பயணமாக ஆசிய நாடுகளுக்கு அமெரிக்க அதிபர் டிரம்ப் பயணம் மேற்கொண்டார். தென்கொரியாவில் நாளை நடைபெற உள்ள ஆசியா-பசிபிக் பிராந்திய பொருளாதார கூட்டமைப்பு மாநாட்டில் டிரம்ப் கலந்து கொள்கிறார் என்று தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில், தென்கொரியாவின் புசான் நகரில் சீன அதிபர் ஜின்பிங்கை அமெரிக்க அதிபர் டிரம்ப் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். பரஸ்பர வரி விதிப்பு, அரிய வகை கனிம ஏற்றுமதிக்கான கட்டுப்பாடுகள் குறித்து இரு நாட்டு தலைவர்களும் ஆலோசனை நடத்தினர். இதில் முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. மேலும் சீனா மீதான வரி விதிப்புகளை தளர்த்துமாறு ஜின்பிங் டிரம்பிடம் வலியுறுத்தியதாக கூறப்படுகிறது. 6 ஆண்டுகளுக்கு பிறகு ஜின்பிங்க்-டிரம்ப் சந்திப்பு நடத்தியது முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது. இந்த பேச்சுவார்த்தை சுமார் 1 மணி நேரம் 40 நிமிடங்கள் நடந்துள்ளன. தொடர்ந்து சீன அதிபரை சந்தித்து பேசிய பிறகு அதிபர் டிரம்ப் கூறியதாவது: சீன அதிபர் ஜி ஜின்பிங் உடனான சந்திப்பு வெற்றிகரமாகவும், பயனுள்ளதாகவும் இருந்தது. நாங்கள் எப்போதும் சிறந்த உறவை கொண்டுள்ளோம். ஒருவரையொருவர் நாங்கள் நன்கு அறிவோம்.

Carefirst Family Health Team

# Carefirst Family Health Team

**Accepting New Patients**
**புதிய நோயாளர்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்**

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய காத்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)

டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

**உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.**

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Raiaratnam

**Clinic Location:**
Carefirst One-Stop Multi-Services Centre
300 Silver Star Blvd., 2/F
Scarborough, ON M1V 0G2
Tel: (416)502-2029
www.carefirstontario.ca

11/24




PLEASE JOIN US FOR THE

# Grand Opening

of

PATHWAY TO WELLNESS CLINIC
Dr Nelantine Jesuthasa

Sunday, November 2nd 2025
From 11am to 4pm

7595 Markham Rd Unit 19
Markham, ON L3S 0B6

Please come and show your support!!

**437 349 8404**
Pathwaytowellnessclinic@gmail.com

POWERED BY?

www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

POWERED BY?

# உதயன் பத்திரிகையின் 29வது ஆண்டு விழாவும் 2025 ஆண்டிற்கான பல்சுவைக் கலை விழாவும்

## 29th Anniversary Celebratons and Uthayan Cultural Festival-2025

**DEC. 13th 2025**
சனிக்கிழமை மாலை 6.00 மணி

* பயனுள்ள உரைகள்
* இசை
* நடனம்
* நாடகம் மற்றும்
* கவிதா நிகழ்வு ஆகியன

ஒன்றாரியோ தமிழிசைக் கலா மன்ற கலாச்சார மண்டபம்
1120 Tapscott Rd Unit 3,
Scarborough, ON M1X 1E8

VIBRANT HOSPITALITY GROUP
ONE OF CANADA'S FASTEST GROWING HOSPITALITY AND DEVELOPMENT GROUPS
OUR EXPERTISE
CONSTRUCTION & DESIGN
OPERATIONS
REVENUE MANAGEMENT
SALES & MARKETING
HUMAN RESOURCES

K T GROUP
PRESIDENT & CEO
MR. KANA SELVA
647302 1189

கனகாம்பிகை
தங்க நகை கடன்
தொடர்புக்கு
416-754-7198

**For Tickets and information: 416 732 1608 or 416 752 1524**

# MORTGAGE
## FINANCIAL SOLUTIONS

COMMERCIAL · RESIDENTIAL · VACANT LAND
INDUSTRIAL · CONSTRUCTION



**OUR SERVICE**



- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal

CALL US

**NESAN**
**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · TD Canada Trust · National Bank · RFA · First National Financial LP · Manulife · Desjardins · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

**55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8**

# "எமது தாய்மண்ணில் தமிழ் மக்களுடைய இருப்பு கேள்விக்குறியாக உள்ள வேளையில் அவர்களின் பாதுகாப்பிற்காகவும் இறையாண்மைக்காவும் குரல் கொடுக்கவல்ல அமைப்பு "உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம்" ஆகும்"

**ஜேர்மனியில் நடைபெற்ற இயக்கத்தின் 52வது எழுச்சி மாநாடும் செந்தமிழ் கலை மாலை பண்பாட்டு விழாவில் எழுச்சி உரையாற்றிய இயக்கத்தின் அகில செயலாளர் நாயகம் துரை கணேசலிங்கம்**












அவர்களில் பிரித்தானியாவிலிருந்து பிரித்தானியக் கிளையின் தலைவர் அமுது இளஞ்செழியன் அதிபரும் டாக்டருமான சரவணமுத்து பூலோகநாதன் கிளையின் செயலாளரான பொன்னம்பலம் வசந்தகுமாரன் கிளையின் ஆலோச-கராக பணியாற்றும் முருகேசு தங்கராஜா கிளையின் ஒருங்கிணைப்பாளர் அமிர்தலிங்கம் விமலதாசன் ஆகியோர் நேரடியாகக் கலந்துகொண்டு தங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்தார்கள்.அவர்களது வருகையான மாநாட்டுக்கும் உலகத் தமிழ்பண்பாட்டுக்கும் தூண்களாக விளங்கியது குறிப்பிடத்தக்கது..

ஜேர்மனியிலிருந்து எமது செய்தியாளர் சுந்தரேசன்

-----------------------------------------------------------------------

"நீண்ட காலமாக எமது மண்ணில் இடம்பெற்ற போர் மற்றும் இன அடக்குமுறை நடவடிக்கைகள் மற்றும் அரச பயங்கரவாதம் ஆகியவை காரணமாக எமது தாய்மண்ணில் தமிழ் மக்களுடைய இருப்பு என்பது கேள்விக்குறியாக உள்ளது. இவ்வாறான காலப்பகுதியில் அவர்களின் பாதுகாப்பிற்காகவும் இறையாண்மைக்காவும் குரல் கொடுக்கக் கூடிய ஒரே அமைப்பு "உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம்" என்னும் உ ன்னத இயக்கமே ஆகும். எனவே 52 ஆண்டு கால பழைமையும் பெருமையும் மிக்க இந்த இயக்கத்தை கட்டிக்காக்கவும் எமது மக்களின் பண்பாடு. தமிழ்க் கல்வி, உலகத் தமிழர்களின் ஒற்றுமை ஆகியவற்றையும் உறுதியுடன் பேணும் வகையில் எமது இயக்கத்தை மேலும் முன்னேற்றப் பாதையில் நகர்த்திச் செல்ல வேண்டும். அத்துடன் எமது புனிதமான இயக்கத்தின் பயணத்தில் சில பாதகமான செயற்பாடுகளை
உலகின் சில நாடுகளில் மேற்கொள்ளும் "புல்லுருவிகளை" நாம் ஒன்றிணைந்து "முளையிலேயே" கிள்ளி எறிய வேண்டும்" இவ்வாறு ஜேர்மனி தேசத்தில் றெயின் நகரில் 25-10-2025 அன்று சனிக்கிழமை நடைபெற்ற இயக்கத்தின் 52வது எழுச்சி மாநாடும் செந்தமிழ் கலை மாலை பண்பாட்டு விழாவில் எழுச்சி உரையாற்றிய உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் அகில செயலாளர் நாயகம் துரை கணேசலிங்கம் முழக்கமிட்டார். அவரது உரை இடம்பெற்றுக்கொண்டிருந்த போது உலகெங்கும் உள்ள பல இயக்கத்தின் அங்கத்தவர்கள் இணையவழி ஊடக அதைச் செவிமடுத்தார்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது கனடாவைத் தலைமையகமாகக் கொண்டும் உலகில் சுமார் இருபது நாடுகளில் கிளைகளையும் நிறுவியும் வெற்றிகரமாக 50 ஆண்டுகளையும் கடந்து செயற்பட்டு வரும் அனைத்துலகத் தமிழர்களின் ஒரே அமைப்பான "உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின்" ஐரோப்பிய ஒன்றியம் நடத்தும் இயக்கத்தின் 52வது எழுச்சி மாநாடும் செந்தமிழ் கலை மாலை பண்பாட்டு விழாவும் அன்று ஜேர்மனி தேசத்தின் நகரில் அமைந்துள்ள **KOPERNIKUS GYMNASIUM AULA** மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

மேற்படி மாநாட்டில் பல கலை நிகழ்ச்சிகளும் கவிதா அரங்கு போன்றைவை இடம்பெற்றன. அத்துடன் குதிரையாட்டம் மற்றும் காவடி ஆட்டம். மயிலாட்டம் ஆகியவையும் இடம்பெற்று எமது பண்பாட்டுக் கோலங்களை இளம் கலைஞர்கள் அங்கு அடையாளமிட்டார்கள் .
மேற்படி இருபெரும் விழாக்களை ஏற்பாடு செய்த ஐரோப்பிய ஒன்றியத்தின் செயற்பாடுகளில் முக்கிய பங்கு வகிக்கும் . உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் அனைத்துலக செயலா-ளர் நாயகம் ஜேர்மனி வாழ் துரை. கணேசலிங்கம் அவர்களும் அனைத்துலக கிளைகளுக்கு பொறுப்பான ஜேர்மனி வாழ் திரு .ஆர். ராஜசூரியர் ஆகியோர் சிறப்புவிருந்தினர்களால் கௌரவிக்கப்பெற்றார்கள் அத்துடன் மேற்படி மாநாட்டையும் பண்பாட்டு விழாவையும் சிறப்பாக நடத்த உதவிய ஏனைய அங்கத்தவர்கள் மற்றும் தொண்டர்கள் ஆகியோரும் கௌரவிக்கப்பெற்றார்கள்.

மேலும் அன்றைய இயக்கத்தின் 52வது எழுச்சி மாநாட்டிலும் செந்தமிழ் கலை மாலை பண்பாட்டு விழாவிலும் முக்கிய விருந்தினர்களாக உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கதின் பிரித்தானியக் கிளையிலிருந்து முக்கியமான உறுப்பினர்ளும் கலந்து கொண்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.





# விடாது விரட்டும் உள் “வீட்டு”பகை!

***“லஞ்ச, ஊழல் முறைகேடுகள் குறித்து விசாரிக்கும் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகமாக தமிழருக்கு சார்பானவரை நியமிக்க எதிர்த்து விட்டார், இழப்பீடுகள் தொடர்பான அலுவலகத்துக்கு தமிழருக்கு எதிரான இராணுவ அதிகாரிகளை நியமிக்க ஆதரவளித்து விட்டார் என்பதற்காக அரசியலமைப்பு பேரவை உறுப்பினர் சிறீதரனுக்கு எதிராக ஒரு இனவாத சிங்களக்கட்சி சிறப்புரிமை மீறல் பிரச்சினையைக் கொண்டு வருமா? எனவே இதன் பின்னணியிலுள்ள கறுப்பு ஆடுகள் யார்?”***

**------------------------------------------------------------ கே.பாலா ---**

அரச உயர்பதவிகளில் ஜனாதிபதி தன்னிச்சையான முறையில் முடிவுகள் எடுப்பதை தடுக்கக் கூடிய அதிகாரமுள்ள அரசியலமைப்பு பேரவையில் சிறிய கட்சிகள் - சிறுபான்மையினக் கட்சிகள் சார்பில் பிரதிநிதியாகவிருக்கும் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பாராளுமன்றக்குழுத் தலைவரும் யாழ் மாவட்ட எம்.பி.யுமான சிவஞானம் சிறீதரனை அதிலிருந்து நீக்க புதிய ஜனநாயக முன்னணி என்ற முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான கட்சியின் பதுளை மாவட்ட சிங்கள எம்.பி.யான சாமர சம்பத் தசநாயக்க என்பவர் பாராளுமன்றத்தில் சிறப்புரிமை மீறல் ஒன்றை முன்வைத்துள்ள நிலையில் அதன் பின்னணியில் சிறீதரனின் சொந்தக் கட்சியான இலங்கை தமிழரசுக்கட்சியின் சில கறுப்பு ஆடுகள் இருப்பது அம்பலமாகியுள்ளது.

புதிய ஜனநாயக முன்னணியின் பதுளை மாவட்ட சிங்கள எம்.பி.யான சாமர சம்பத் தசநாயக்க சிறீதரனுக்கு எதிரான இந்த சிறப்புரிமை மீறல் பிரச்சினையை கடந்த 22 ஆம் திகதி புதன்கிழமை பாராளுமன்றத்தில் முன்வைத்த போது “இது சிறப்புரிமை மீறல் பிரச்சினையில்லை. அதற்கான போதிய விபரங்கள் இதில் இல்லை” எனக்கூறி சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன நிராகரித்த போது வரிந்து கட்டிக்கொண்டு எழுந்த தமிழரசுக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி.யான. இரா. சாணக்கியன், நீங்கள் (சபாநாயகரை நோக்கி) எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிறப்புரிமை மீறல் பிரச்சினையை முன்வைப்பதற்கு இடமளிப்பதில்லை. சிறப்புரிமை மீறல் பிரச்சினை முன்வைத்தால் அது பற்றி ஆராய்வதற்கு சிறப்புரிமை மீறல் தொடர்பான குழு உள்ளது. நீங்கள் அவ்வாறு செயற்படுவதாக இருந்தால் நிலையியல் கட்டளையில் இருந்து சிறப்புரிமை மீறல் தொடர்பான குழுவை நீக்குங்கள். உங்களுக்கு எதிராக இலஞ்சம் அல்லது ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு காணப்படுவதாலா, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சிறப்புரிமை மீறல் பிரச்சினையை முன்வைக்க இடமளிக்க மறுக்கின்றீர்கள். என்று கேள்வியெழுப்பி சிறீதரனுக்கு எதிரான அந்த சிறப்புரிமை மீறல் பிரச்சினையின் பின்னால் உள்ளவர்கள் நாமே என்பதை “எங்கப்பன் குதிருக்குள் இல்லை” என்ற கதையாக காட்டிக் கொடுத்துவிட்டார்.

இந்நிலையில் இரா.சாணக்கியனதும் சாமர சம்பத் தசநாயக்கவினதும் குற்றச் சாட்டுகளுக்கு பதிலளித்த சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன, இதில் எவ்வித ஒழுங்குப்பிரச்சினையும் இல்லை. சாமர சம்பத் தசநாயக்க முன்வைத்த சிறப்புரிமை மீறல் பிரச்சினையில், அவரது சிறப்புரிமை மீறப்பட்டுள்ளமை முறையாக குறிப்பிடப்படவில்லை. அவற்றை தெளிவாக குறிப்பிட்டு சிறப்புரிமை மீறல் பிரச்சினையை மீண்டும் சமர்ப்பிக்கலாம் என்று அறிவித்ததையடுத்து. மறுநாள் “சட்ட நுணுக்கம்” நன்கு தெரிந்த ஒருவரினால் தயாரிக்கப்பட்ட சிறீதரனுக்கு எதிரான சிறப்புரிமை மீறல் பிரச்சினையை சாமர சம்பத் தசநாயக்க முன்வைத்தார். புதிய ஜனநாயக முன்னணியின் பதுளை மாவட்ட சிங்கள எம்.பி.யான சாமர சம்பத் தசநாயக்க முன்வைத்த சிறப்புரிமை மீறல் பிரச்சினையின் சாராம்சம் இதுதான்

“அரசியலமைப்பு பேரவைக்கு சிறுபான்மை எதிர்க்கட்சிகளால் அவர் பரிந்துரைக்கப்பட்ட போதிலும் அரசாங்க தரப்புகளுடன் அவர் இணைந்து செயல்படுவது அவர் மீது வைக்கப்பட்டுள்ளகூட்டு நம்பிக்கையை குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது மற்றும் அவர் பிரதிநிதித் துவப்படுத்த நியமிக்கப பட்டவர்களின்விருப்பத்தை காட்டிக் கொடுக்கிறது சிறீதரனின் நடத்தை, எதிர்க்கட்சிகளின் ஒருமித்த கருத்தை புறக்கணிப்பதன் மூலம் அரசமைப்பின் பிரிவு 41க்கு முரணாகச் செயல்பட்டுள்ளார். தமக்கு எதிரான லஞ்சக் கு ற்றச்சாட்டுகளை மறைத்து, விசாரணையின்கீழ் இருக்கும்போது அரசாங்கத்துடன் இணைந்து வாக்க ளிப்பதன் மூலம் சிறீதரன் தனது அரசமைப்புப் பொறுப்பை தனிப்பட்டபாதுகாப்பாக மாற்றியுள்ளார், பொறுப்புக்கூறல் நிறுவனத்தை தனது சொந்ததவறான நடத்தைக்கான கேடயமாகமாற்றியுள்ளார்.

தன்னை பரிந்துரைத்த எதிர்க்கட்சி உறுப்பினர்களின் ஒருமித்த கருத்துக்கு மாறாக வாக்களித்த சிறீதரன் அரசியலமைப்பை வேண்டுமென்றே மீறியுள்ளார், சிறுபான்மை எதிர்க்கட்சிபிரதி நிதித்துவத்தை காட்டிக் கொடுத்துள்ளார் அரசியலமைப்பு பேரவையின் நெறிமுறை அடித்தளத்தை நாசமாக்கியுள்ளார் இந்த நடத்தை முறை வெறும் அரசியல் தவறான நடத்தை மட்டுமல்ல இது தார்மீக ஊழல். இது பொதுமக்களின்நம்பிக்கையை சிதைக்கிறது, பாராளுமன்றத்தின் கண்ணியத்தை மீறுகிறதுமேலும் நாட்டின் ஜனநாயக நிறுவனங்கள்மீதான மக்களின் நம்பிக்கையை காட்டிக்கொடுக்கிறது. எனவே அரசியலமைப்பு பேரவையிலிருந்து சிறீதரன் நீக்கப்பட வேண்டும்.

சாமர சம்பத் தசநாயக்க முன்வைத்த சிறப்புரிமை மீறல் பிரச்சினையை ஏற்றுக்கொண்ட சபாநாயகர் அதனை பாராளுமன்ற சிறப்புரிமைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தியுள்ளார். இனி அவர்கள் இது தொடர்பில் விசாரணைகளை நடத்தி சாமர சம்பத் தசநாயக்க கூறியுள்ளதுபோல் அவரின் சிறப்புரிமை எங்காவது சிறீதரனால் மேற்பட்டுள்ளதா என்பதனை ஆராய்ந்து முடிவுகளை சபாநாயகருக்கு அறிவிப்பார்கள். அதனை சபாநாயகர் சபைக்கு அறிவிப்பார். அந்த அறிவிப்பு ஒரு சில வாரங்களில் வரலாம். ஒரு சில மாதங்களிலும் வரலாம். சில வேளைகளில் பலமாதங்களும் எடுக்கலாம் அது எப்போது அறிவிக்கப்படும் என்பது சபாநாயகரின் கைகளில்தான் உள்ளது.

கடந்த ரணில் விக்கிரமசிங்கவின் “அதிர்ஷ்ட ஆட்சி”யில் அரசியலமைப்பு பேரவைக்கு சிறிய கட்சிகள் சார்பில் தமிழ் பிரதிநிதியாக ஒருவரை நியமிக்க பேரினவாதக் கட்சிகள் காட்டிய எதிர்ப்பும் அரசியலமைப்பு பேரவையின் சிறிய கட்சிகளின் பிரதிநிதியாக தமிழ் தேசியக்கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவரும் தமிழீழ விடுதலைக்கழகத்தின் தலைவரும் அப்போது யாழ் மாவட்ட எம்.பி.யாக இருந்தவருமான தர்மலிங்கம் சித்தார்த்தனின் பெயரை பிரேரித்து விட்டுஅவரை நியமிக்குமாறு தமிழ் தேசியக்கட்சிகள் நடத்திய போராட்டமும் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சி கலையும் வரை சித்தார்த்தன் நியமிக்கப்படாமையும் வரலாறு.

பாராளுமன்றத்தில் சிறிய கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தி பல சிங்களக்கட்சிகளும் இருப்பதால் தமது தரப்பிலிருந்தே ஒரு பிரதிநிதியை தெரிவு செய்ய வேண்டுமென தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அப்போதைய எம்.பி.யுமான விமல் வீரவன்ச, பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும் அப்போதைய எம்.பி.யுமான உதய கம்பன்பில ஆகிய இரு இனவாதிகள் போர்கொடிதூக்கியதை காரணமாக வைத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் “இராஜதந்திரக் காய்” நகர்த்தி சித்தார்த்தனை நியமிக்காது இறுதிவரை இழுத்தடித்து இறுதியில் ஆட்சியிலிருந்தே காணாமல் போனார். அவருடன் சேர்த்து விமல் வீரவன்சவும் உதயகம்பன் பிலவும் அரசியலிலிருந்து காணாமல் போயினர்.

இவ்வாறான நிலையில்தான் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் ஆட்சியில் அரசியலமைப்பு பேரவைக்கு சிறிய கட்சிகளின் பிரதிநிதியாக இரகசிய வாக்கெடுப்பின் மூலம் இலங்கை தமிழரசுக்கட்சியின் யாழ் மாவட்ட எம். பி.யான சிவஞானம் சிறீதரன் நியமிக்கப்பட்டார். அநுரகுமார திஸாநாயக்க அரசில் இது ஒரு சிறந்த “மாற்றம்” ஆக இருந்தாலும் அரசியலமைப்பு பேரவைக்கு சிறீதரன் எம்.பி. தெரிவாகிவிடக்கூடாது என்பதில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் அரசியல் வாரிசான நாமல் ராஜபக்சவும் தமிழ் தேசியத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் இரு “கறுப்பு ஆடு”களும் சதி செய்த போதும் அது அப்போது வெற்றியளிக்கவில்லை.

அரசியலமைப்பு பேரவைக்குசிறிய கட்சிகளின் பிரதிநிதியாக ஒருவரை தெரிவு செய்ய வேண்டிய நிலையில் அரசியலமைப்பு பேரவையின் சிறிய கட்சிகளின் பிரதிநிதியாக இலங்கைத்தமிழரசுக்கட்சியை சேர்ந்த யாழ் மாவட்ட எம்.பி.யான சிவஞானம் சிறிதரனின் பெயரை அதேகட்சியை சேர்ந்த அம்பாறை மாவட்ட எம். பி.யான கவீந்திரன் கோடீஸ்வரன் முன்மொழிய தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ் மாவட்ட எம்.பி.யுமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வழிமொழிந்தார்.இதனையடுத்து சிறீதரன் நியமிக்கப்பட்டுவிடக்கூடாது என்பதற்காக செயற்பட்ட மஹிந்த ராஜபக்சவின் வாரிசான பொதுஜன பெரமுனவின் தேசியப்பட்டியல் எம்.பி. நாமல் ராஜபக்ச சிறீதரனை தோற்கடிக்க வேண்டும், அதேவேளை மலையகத்தமிழர்களுடன் தமிழர்களை மோதவிட வேண்டும் என்ற ஒரு கல்லில் இரு மாங்காய்கள் அடிக்கும் இனவாத சிந்தனையில் அரசியலமைப்பு பேரவையின் சிறிய கட்சிகளின் பிரதிநிதியாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலரும் ஐக்கியதேசியக்கட்சியின் நுவரெலியா மாவட்ட எம்.பி.யுமான ஜீவன் தொண்டமானின் பெயரை முன்மொழிய ரணில் விக்கிரமசிங்கவின் புதிய ஜனநாயக முன்னணியின் பதுளை மாவட்ட எம்.பி. யான சாமர சம்பத் வழிமொழிந்தார்.

இவ்வாறான நிலையில் அரசியலமைப்பு பேரவையின் சிறிய கட்சிகளின் பிரதிநிதியாக இலங்கை தமிழரசுக்கட்சியின் எம்.பி.யான சிறீதரனை தெரிவு செய்வதா அல்லது இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஜீவன் தொண்டமானை தெரிவு செய்வதா என்பதற்காக இரகசிய வாக்கெடுப்பு நடத்த தீர்மானிக்கப்பட்டது. இந்த இரகசிய வாக்கெடுப்பில் 25 எம்.பிக்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்த நிலையில் வாக்கெடுப்பு நடத்தப்பட்ட போது சிறீதரன் எம். பி.11 வாக்குகளையும் ஜீவன் தொண்டமான் எம்.பி. 10 வாக்குகளையும் பெற்ற நிலையில் சிறீதரன் எம்.பி. அரசியலமைப்பு பேரவையின் சிறியகட்சிகளின் பிரதிநிதியாக தெரிவு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இந்த வாக்கெடுப்பில் எதிர்கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்திய ரோஹித அபேகுணவர்தன், அனுராத ஜயரத்ன மற்றும் இரு எம்.பி.க்கள் பங்கேற்கவில்லை. அதேவேளை இந்த வாக்களிப்பில் தமிழ் தேசியத்தை பிரதிநிதித்துவப்படுத்திய இரு “கறுப்பு ஆடுகள்” ஜீவன் தொண்டமானுக்கு வாக்களித்துள்ள தகவல் பின்னர் வெளியே கசிந்தது. அதாவது சிறீதரன் எம்.பி. தெரிவாகிவிடக்கூடாது என்பதில் இந்த இரு தமிழ் தேசிய கறுப்பு ஆடுகளும் உறுதியாகவிருந்த நிலையில் இரு முஸ்லிம் எம்.பி.க்களின் ஆதரவுடனேயே சிறீதரன் எம்.பி வெற்றி பெற்றார் என உள் “வீட்டு” தகவல்களும் அப்போது தெரிவித்தன.

இந்த அரசியலமைப்பு பேரவையில் சிறிய கட்சிகளின் பிரதிநிதியாக தமிழ் பிரதிநிதி ஒருவர் தெரிவு செய்யப்பட்ட நிலையில் அரசியலமைப்பு பேரவை என்றால் என்ன, அப்பேரவை ஊடாக முன்னெடுக்கப்படும் பணிகள் எவை என்பதை அறிய பலரும் ஆர்வமாக இருப்பர் என்பதனால் அதுதொடர்பிலும் ஒரு சிறு விளக்கம்.

அரசியலமைப்பு பேரவையில் 10 உறுப்பினர்கள் அங்கம் வகிப்பர். இதன் தலைவராக சபாநாயகர் செயற்படுவார். பிரதமர் ஹரிணி அமரசூரிய, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோர் இதில் நிரந்தர உறுப்புரிமையை பெற்றிருப்பர்.

***(தொடர்ச்சி 17 பக்கம்)***

# உங்கள் வீட்டை புதுப்பிக்க வேண்டுமா?



# Legalize your basement now!

* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
* Painting
* Custom Closets



## Coverall Group Inc.

416-706-8160 OR 416-893-3216

(15 பக்கத் தொடர்ச்சி)

## விடாது விரட்டும் உள் "வீட்டு"பகை!

ஜனாதிபதியின் பிரதிநிதியாக தேசிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் எம்.பி.யான ஆதம்பாவா நியமிக்கப்பட்டார் எதிர்க்கட்சித் தலைவரின் பிரதிநிதியாக ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட எம்.பி.யான அஜித் பி. பெரேரா நியமிக்கப்பட்டார். பிரதமரும் தனது பிரதிநிதியாக ஒருவர் நியமிக்க முடியும். பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சாராத கட்சி உறுப்பினர் ஒருவருக்கும் இடமளிக்க வேண்டும். இதற்கு மேலதிகமாக கட்சி சாராத மூன்று சிவில் பிரதிநிதிகளும் நியமிக்கப்படுவார்கள்.

தேசிய தேர்தல் ஆணைக்குழு, அரச சேவை ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு, இலஞ்சம், ஊழல் ஆணைக்குழு, நிதி ஆணைக்குழு, எல்லை நிர்ணய ஆணைக்குழு, கணக்காய்வு ஆணைக்குழு, தேசிய பெறுகை ஆணைக்குழு, ஆகியவற்றுக்கான உறுப்பினர்களின் பெயர்களை, அரசியலமைப்பு பேரவையே ஜனாதிபதிக்கு பரிந்துரைக்கும். அதேபோன்று பிரதம நீதியரசர், உயர்நீதிமன்ற நீதியரசர்கள், மேன்முறையீட்டு நீதிமன்ற தலைவர் மற்றும் நீதிபதிகள், சட்டமா அதிபர், பொலிஸ்மா அதிபர், கணக்காய்வாளர் நாயகம், ஒம்புட்ஸ்மன், பாராளுமன்ற செயலாளர் நாயகம் ஆகிய நியமனங்கள், அரசியலமைப்பு பேரவையின் அனுமதியுடனேயே ஜனாதிபதியினால் மேற்கொள்ளப்படும். ஜனாதிபதி தன்னிச்சையான முறையில் முடிவெடுப்பதை, அரசியலமைப்பு பேரவை என்ற இந்த ஏற்பாடு தடுத்துள்ளது.அதனாலேயே அரசியலமைப்பு பேரவையும் அதில் சிறிய கட்சிகளின் பிரதிநிதியாக தமிழ் பிரதிநிதித்துவமும் முக்கியம் பெறுகின்றது.

இவ்வாறான நிலையில் அரசியலமைப்பு பேரவைக்கு ஆளும் தரப்பு மற்றும் பிரதானஎதிர்க்கட்சி ஆகியவற்றைச் சாராத 24 எம்.பிக்களின் சார்பாகவே சிறீதரன் பிரதிநிதித்துவப்படுத்துகிறார். இந்த 24 எம்.பிக்களில் தமிழரசுக்கட்சியின் 8 எம்.பிக்கள் மற்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்,செல்வம் அடைக்கலநாதன் ஆகிய 2 எம்.பிக்கள் உட்பட 10 தமிழ் எம்.பிக்களைத் தவிர்ந்த மற்றைய 14 பேரும் தங்கள் சார்பில் அரசமைப்பு பேரவையை பிரதிநிதித்துவப்படுத்தும் சிறிதரன், அங்கு பெரும்பாலும் ஆளும் தரப்பின் நிலைப்பாட்டையே ஆதரித்துச் செயற்படுகின்றார் என்ற குற்றச்சாட்டை முன்வப்பதாக சிலர் கூறுகின்றனர்.

அரசியலமைப்பு பேரவையை பொறுத்தவரை 2 முக்கிய முடிவுகளில் சிறீதரனின் பங்களிப்பு - அரசுத் தரப்புக்கு ஆதரவாக செயற்பட்டார் என்ற ரீதியில் - சர்ச்சைக்குரியதாகி யுள்ளது. ஒன்று - லஞ்ச, ஊழல் முறைகேடுகள்குறித்து விசாரிக்கும் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகமாக மேல் நீதிமன்ற நீதிபதி ரங்க திஸநாயக்கவின் பெயர் பரிந்துரைக்கப்பட்டவிடயம். அரசுத் தரப்புடன் சேர்ந்து சிறிதரன் அளித்த ஒரு மேலதிக வாக்கின் மூலம் அவரது பெயர் அரசியலமைப்பு பேரவையால் பிரேரிக்கப்பட்டுள்ளமை. இந்தப் பதவிக்கு பிரதி சொலிஸிட்டர்ஜெனரல் மாதவ தென்னக்கோன் போட்டியிட்டிருந்தார். பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் தமிழ் இளைஞர்களுக்கு எதிரான வழக்குகளில் சட்டமா அதிபர் திணைக்களத்தில் ஓரளவு நேர்மையோடுசெயல்பட்டவர் மாதவ தென்னக்கோன். பிள்ளையானை பிணையில் விடும் நடவடிக்கையை முன்னர் சட்டமா அதிபர் திணைக்களத்திலேயே சட்டமா அதிபரையும் மீறி கடுமையாகஎதிர்த்தவர் அவர் . அத்தகைய மாதவ தென்னக்கோனைஇப்பதவிக்கு பரிந்துரைக்க முடியாமல்போனமைக்கு சிறிதரன் மீது எதிர்க்கட்சியினர் கடும் விசனம் கொண்டுள்ளதாக சிலர் கதை விடுகின்றனர்.

அடுத்தது இழப்பீடுகள் தொடர்பான அலுவலகத்துக்கு உறுப்பினர்களாக படைத்தரப்பு பின்னணி கொண்டவர்கள் நியமிக்கப்பட்டமைக்கு சிறீதரன் ஆதரவு வழங்கியுள்ளார். .படைத்தரப்பு நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட தமிழ்மக்களுக்கு - இழப்பீடு வழங்குவதுதொடர்பில் பிரேரிக்கும் ஐவர் குழுவில் மூவர் படைத் தரப்பினராக அமைவதற்கு அரசியலமைப்பு பேரவை உறுப்பினராக இருந்து கொண்டு சிறீதரனும் ஒத்துழைத்து வழி செய்தார் என்பது எதிர்க்கட்சிகள் தரப்பில் எதிர்ப்பலைகளை ஏற்படுத்தியுள்ளது என்றும் இந்தக்கதை விடும் நபர்கள் கூறுகின்றனர்.

இந்த இரு விடயங்களிலும் சிறீதரன் அவ்வாறு நடந்து கொண்டிருந்தால் அது தவறு. அதில் மாற்றுக் கருத்துக் கிடையாது. இந்த இரு விடயங்களிலும் சிறீதரன் மீது தமிழ் கட்சிகள் ,தமிழ் மக்கள், சிறுபான்மையினக் கட்சிகள் விசனமடைய நியாயம் உண்டு. ஆனால் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தமிழ் இளைஞர்களுக்கு எதிரான வழக்குகளில் சட்டமா அதிபர் திணைக்களத்தில் நேர்மையோடு செயல்பட்ட பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் மாதவ தென்னக்கோனை லஞ்ச, ஊழல் முறைகேடுகள் குறித்து விசாரிக்கும் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகமாக நியமிக்க சிறீதரன் ஆதரிக்கவில்லை என்பதற்காகவும் இழப்பீடுகள் தொடர்பான அலுவலகத்துக்கு உறுப்பினர்களாக படைத்தரப்பு பின்னணி கொண்டவர்கள் நியமிக்கப்பட்டமைக்கு சிறீதரன் ஆதரவு வழங்கியுள்ளார் என்பதற்காகவும் அரசியலமைப்பு பேரவையை சிறீதரன் சார்பில் பிரதிநிதித்துவப்படுத்தும் கடும்போக்கு இனவாத சிந்தனைகொண்ட சிங்களக் கட்சிகளை சேர்ந்தவர்கள் சிறீதரன் மீது விசனமடைந்துள்ளதாகவும் அதனாலேயே சிங்கள எம்.பி.யான சாமர சம்பத் தசநாயக்க சிறப்புரிமை மீறல் பிரச்சினையை கொண்டு வந்து அரசியலமைப்பு பேரவையிலிருந்து சிறீதரனை நீக்க வேண்டுமென வலியுறுத்துவதாகவும் கூறுவதுதான் "பெப்ரவரி மாதத்தில் 31 நாட்கள்" என்ற கதையாகவுள்ளது.

ஊழல் முறைகேடுகள் குறித்து விசாரிக்கும் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகமாக தமிழருக்கு சார்பான பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் மாதவ தென்னக்கோனை நியமிக்காமைக்காகவும் இழப்பீடுகள் தொடர்பான அலுவலகத்துக்கு உறுப்பினர்களாக படைத்தரப்பு பின்னணி கொண்டவர்களை நியமித்தமைக்காவையும் சிங்கள கடும்போக்கு வாதிகள் சிறீதரனுக்கு எதிராக சிறப்புரிமை மீறல் பிரச்சினை கொண்டுவந்துள்ளார்கள் என்று கூறுபவர்களின் மூளையை பரிசோதிக்க வேண்டும்.

தமிழருக்கு சார்பானவரை நியமிக்கவில்லை என்பதற்காகவும் தமிழருக்கு எதிரான இராணுவ அதிகாரிகளை நியமித்து விட்டார்கள் என்பதற்காகவும் இனவாத சிந்தனை கொண்டோரின் தலைமையிலான ஒரு சிங்களக்கட்சி தமிழருக்கு சார்பான சிறப்புரிமை மீறல் பிரச்சினையைக் கொண்டுவருமா? அதனால்தான் சிறீதரனுக்கு எதிரான இந்த சிறப்புரிமை மீறல் பிரச் சினையில் தமிழரசுக்கட்சியின் ஒரு சில "கறுப்பு ஆடுகள்" பின்னணியில் உள்ளதாக கூறவேண்டியுள்ளது. தமிழரசுக்கட்சியின் தலைவர்தெரிவில் சிறீதரனுக்கு எதிராக உருவான "உள் வீட்டுப் பகை" பல்வேறு வடிவங்களில் இன்றுவரை சிறீதரனை விடாது விரட்டுகின்றது.

ஒரு சில வருடங்களுக்கு முன்பு வரை இலங்கை தமிழரசுக்கட்சியை அழிக்க, அதிலுள்ள தமிழ் தேசியப்பற்றாளர்களை வெளியேற்ற. முடக்க, தமிழரசுக்கட்சியிலுள்ள "கறுப்பு ஆடு"களை சிங்கள பேரினவாத தலைவர்கள், கட்சிகள் பயன்படுத்தி தமிழ்த்தேசிய இனத்தையும் போராட்டத்தையும் பலவீனப்படுத்தி வந்ததே வரலாறு. ஆனால் தற்போது இலங்கை தமிழரசுக்கட்சியை அழிக்க, அதிலுள்ள தமிழ் தேசியப்பற்றாளர்களை வெளியேற்ற. முடக்க, தமிழரசுக்கட்சியிலுள்ள சில "கறுப்பு ஆடுகள்" சிங்கள அரசியல்வாதிகளை பயன்படுத்தத் தொடங்கி தமிழரசுக்கட்சியில் புதிய துரோக வரலாற்றினை எழுதத் தொடங்கியுள்ளனர்.


## மனிதநேயப் பணி
## (நிலைமண்டில ஆசிரியப்பா)

மனிதநேயப் பணியே மருத்துவம் ஆகிடும்
கனிவொடும் கண்ணிய உணர்வொடும் செய்வது
பிணியொடு வருவோர்க்குப் பணிவொடு உதவிடும்
மணியான தொழிலே மருத்துவத் தொழில்
காலம் பாராக் கடமை ஆற்றியே!
காலன் கவராக் காக்கும் தொண்டாம்
ஆறா வலியொடு அரற்றும் மனிதர்க்கு
ஆறுதல் சொல்லியே அணைக்கும் சேவை
இயற்கை உபாதைக்கு எழும்ப இயலார்க்கு
இயன்றவரை ஏவல் செய்திடும் தாதியர்
தானாய் உணவைச் சாப்பிட முடியார்க்கு
போனகம் ஊட்டும் பொறுமைப் பணியாளர்
ஆய்வு கூடத்தில் அரும்பணி ஆற்றுவோர்
ஓய்விலா உழைக்கும் உத்தமப் பணியாள்
காவல் கடமையைக் கவனமாய்ப் புரிவோர்
ஏவும் வேலையை ஏற்றிடும் ஊழியர்
தொழில்நுட்ப வேலையைத் தொய்விலாச் செய்வோர்
அழுக்கினை நீக்கிட அயரா உழைப்போர்
மக்கள் சேவையே மகேசன் சேவையாய்
விகாசமாய் விரும்பிச் செய்யும் தொண்டர்கள்.
அவசர தேவையில் அம்புலன்ஸ் ஓட்டுவோர்
அவனியில் ஆண்டவன் அடுத்தநிலை உள்ளோர்
மகத்தான சேவையாம் மருத்துவச் சேவையை
யுகத்தில் உள்ளோர்க்கு யோகிபோல் தந்துமே!
மருத்துவச் செயலில் மகிழ்வொடு உழைப்போரை
விருப்போடு நாமும் வாழ்த்தி நிற்போமே!
போனகம் – – – – – – உணவு விகாசம் – – – – – – முகமலர்ச்சி

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்**
(416) 844-7453




GM TOURS & TRAVELS
CHIANG MAI (THAILAND),
LAOS,CAMBODIA, VIETNAM,
BALI (INDONESIA) & MALAYSIA
$6699
Jan 16 to Feb 07, 2026
23 days tour!
6 countries
All Tours are All Inclusive
(Ticket, Breakfast, Lunch, Dinner, Transportation and Entering Fees)
* Travel Insurance Not Included * Visa for the countries not included
IT'S TIME TO TRAVEL
Call Or Whatsapp
BALAN: 647-657-0848
atoz_balan@yahoo.com
Book Before NOV 20th - 2025
Deposite - 70%
DESTINATIONS COVERD
Chiang Mai, Chiang Rai, Siem Reap,
Phnom Penh, Laos,Hanoi, Halong Bay,
Sapa, Bali, Malaysia
The tours will be departuring from and arriving at Toronto Pearson Airport


Radha
Since 1972
RADHA AUTO
வங்கியால்
உடமைப்படுத்தப்பட்ட
வாகனங்களை
விற்பது
எமது விசேடத்திறன்
RADHA
416.412.3838
We sold Austin Cambridge & Morris Oxford in Sri Lanka
We are selling Lexus, Mini Vans, Honda & Toyota in Canada
மிகத் தரமான
கார்களை, குறைந்த விலையில்,
நாணயமான சேவையுடன் வாங்கிட
ஒருமுறை அழையுங்கள்...
2250 Markham Road
Scarborough ON M1B 2W4
(Markham & Finch)


TK DESIGN STUDIO
Architecture | Interior | Graphics
Our Services
• Architectural Design & Solutions
• Interior Design & Material Selection
• Graphic Designing (Posters, Invitations, Video Ads)
• 2D Planning & 3D Visualization
• Resume & Logo Design
Contact: Tel: +1(942) 380-1165
Email: tkdesignstudio03@gmail.com
Instagram: @tkdesignstudio1


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
32
வருட சேவைகள்
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி
வீதத்தில் தங்க நகை அடகு!
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
PAWNBANK INC.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

# இவ்வார ராசிபலன்

**31-10-2025 வெள்ளி தொடக்கம் 06-11-2025 வியாழன் வரையும்**




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

"ஜோதிட மகரிஷி"
**Dr. K. RAM.Ph.D (USA)**

தொடர்புக்கு: 0091-9840160068
9940431377





**மேஷம்:** செல்வாக்கு உயரும் வாரம். வாடும் நிலை விலகி, வீடு, நிலமும் வாங்கக்கூடிய அற்புதமான காலம். எதிர்பார்த்த உதவி தாமதமாகும். காதலர்களுக்குள் கசப்பு நீங்கும். சொத்துக்களில் வில்லங்கம் விலகும். திடீர் மாற்றங்கள் நிகழும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். கடன் சுமை குறையும். தாய்வழி தகராறு குறையும். கனவுகள் பலிதமாகும். கனிவான பேச்சு அவசியம். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். ஆலய தரிசனம் அமைதி தரும். இனம் புரியா சந்தோஷம் ஏற்படும். பிள்ளைகளால் தனவரவு உண்டு. வெளியூர் பிரயாணம் வெற்றி தரும். வாய்ப்பேச்சில் நிதானம் தேவை. ஆண்களின் அதிகாரம் உயரும். பெண்களால் பெருமை சேரும். வறுமையின் வாட்டம் குறையும். கணினி துறையில் ஊதிய உயர்வு உண்டு. பயணங்களால் பணம் கரையும். அரசு வழியில் ஆதாயம் உண்டு. பழைய பாக்கிகள் வசூலாகும். வாழ்க்கையில் பிடிப்பு ஏற்படும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும். மற்றவர்களிடத்தில் கவனம் தேவை. தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். குடும்ப சந்தோஷம் அதிகரிக்கும். செயல்பாட்டில் கவனம் தேவை. கூட்டுத்தொழில் லாபம் தேவை. ஆரோக்கியம் கூடும். சவாலான விஷயங்களை சமாளித்து சாதனை நிகழ்த்தும் காலம். கர்ம வினைகள் அகலும். பணப்புழக்கம் சீராக இருந்து வரும். நினைத்ததை சாதித்துக் காட்டுவீர். குதூகலம் கூடும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். வெளிநாட்டுப் பயணம் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: இஷ்ட தெய்வம், அதிர்ஷ்ட எண்: 8,4,3,2
அதிர்ஷ்ட நிறம்: செந்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,W




**ரிஷபம்:** இல்வாழ்க்கை நல்வாழ்க்கையாய் அமையும் வாரம். புதிய வாய்ப்புக்கள் கூடும். உறவினர் வழியில் செலவுகள் அதிகரிக்கும். வியாபார லாபம் கூடும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். ஏற்றமதி தொழில் லாபம் தரும். பெற்றோர் உடல்நிலையில் கவனம் தேவை. உறவினர்களின் அன்பு அதிகரிக்கும். திருமண முயற்சி பலன் தரும். அரசு வழியில் ஆதாயம் பெருகும். பொது விஷயங்களில் நாட்டம் அதிகரிக்கும். பித்ருக்கள் சாபம் நீங்கும். பழையக்கடன் வசூலாகும். மனிதநேயம் மிகுதியாகும். நண்பர்கள் உதவி கிடைக்கும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். பாவங்கள் விலகும். மாணவர்கள் கல்வியில் சிறப்பார்கள். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. முன்கோபத்தை தவிர்ப்பது நல்லது. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். தொழில் போட்டி மறையும். குடும்பத்தில் அமைதி நிலவும். இல்லம் தேடி வாய்ப்பு வரும். காதலர்கள் ஒற்றுமை கூடும். உடன்பிறப்புக்களின் உதவி கிடைக்கும். மங்கள செய்தியால் மனம் மகிழும். வங்கி சேமிப்பு உயரும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். புது முயற்சி தள்ளி வைக்கவும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் தோன்றும். உழைப்பால் மதிப்பும், உங்களால் சிறப்பும் சேரும் காலம். மனைவியால் மதிப்பு உயரும். மன அமைதி கிட்டும். மந்தமான நிலை மாறும். அற்புதமான தருணம். பொருளாதாரம் உயரும். சிறப்புக்கள் சேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விநாயகர், அதிர்ஷ்ட எண்: 5,2,3,1
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,O




**மிதுனம்:** கௌரவ வாய்ப்பு கிடைக்கும் வாரம். கைமேல் காசு கிடைக்கும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. இனம்புரியா சந்தோஷம் குடிக்கொள்ளும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். செயல்பாட்டில் தீவிரம் கூடும். விபரீத எண்ணம் விலகும். பேச்சில் நிதானம் தேவை. புதிய நட்பு உருவாகும். இனிப்பான செய்திகள் வரும். சுறுசுறுப்பாகச் செயல்படுவீர். பயணம் வெற்றி தரும். உதவும் குணம் உண்டு. சாதக சூழ்நிலை உருவாகும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். உறவினர் வருகை உண்டு. வணிகத்தொழில் வளம் கூடும். பழைய பாக்கி வசூலாகும். ஆபரணச் சேர்க்கையுண்டு. ஐஸ்வர்யம் கிடைக்கும். ஊக்கத்தோடு செயல்பட்டு உயர்வுகளை சந்திக்கும் உன்னதமான காலம். விரும்பியது நிறைவேறும். உற்சாகம் களை கட்டும். வேலைப்பளு அதிகரிக்கும். புது சிந்தனை உருவாகும். பழைய நண்பரை சந்திக்கும் வாய்ப்புக் கிட்டும். கலைத்தொழில் திருப்பம் ஏற்படும். ஆடை, அணிகலன் சேர்க்கை உண்டு. விடாமுயற்சி அவசியம். சுபச்செலவு கூடும். கமிஷன் தொழில் லாபம் தரும். தொழில் லாபம் பெருகும். போட்டிகள் கடுமையாகும். வியாபாரம் சுமாராக இருக்கும். நிர்வாக அலைச்சல் கூடும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். துன்பம் விலகி ஓடும். இழந்த செல்வம், இழந்த கௌரவம் திரும்பக் கிடைக்கும். சேமிக்கும் எண்ணம் ஏற்படும். முயற்சிகளில் வெற்றி தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: மஹாலஷ்மி, அதிர்ஷ்ட எண்: 2,4,3,9
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,W




**கடகம்:** சாதகமான சூழ்நிலை உருவாகும். அணிகலன் சேர்க்கையுண்டு. ஆடம்பர எண்ணம் அலைமோதும். பதவி உயர்வு கிட்டும். திடீர் திருப்பம் ஏற்படும். கலைத்தொழில் லாபம் தரும். கடன் வாங்க நேரிடும். கண்நோய் வந்து போகும். கவலைகள் விலகும். கால்நடைகளால் லாபம் உண்டு. மனைவியால் மரியாதை உயரும். பகைவர் பணிந்து நிற்பர். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். உறவுகளால் மதிப்பு கூடும். உத்தியோக உயர்வு கிட்டும். பாக்கிகள் வசூலாகும். வியாபார அபிவிருத்தி ஏற்படும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். சுபிட்ஷங்கள் பெருகும். பெண்களால் பெருமை சேரும். பிராணிகளால் தொல்லை உண்டு. பல் வலி வந்து போகும். பணவரவு திருப்தி தரும். பிள்ளைகளால் வெகுமானம் கூடும். மாற்றங்கள் கிடைக்கும். மகத்தான காலம். நினைத்ததெல்லாம் நடக்கும் நேர்த்தியான காலம். வீண் வம்பு விலகும். வயிற்று உபாதைகள் தோன்றி மறையும். விரக்திகள் மறையும். வரவு திருப்தி தரும். குடும்ப கௌரவம் உயரும். குதூகலமான எண்ணம் உருவாகும். மின்சாரத்தில் கவனம் தேவை. பிரபலங்களைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். வெற்றி வீடு தேடி வரும். விவேகம் கைகொடுக்கும். செல்வச் செழிப்பு உயரும். காரியம் கைக்கூடும். தெளிவான முடிவுகள் உதயமாகும். நெருக்கடிகள் குறையும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். திருஷ்டிகள் விலகும். ஆடம்பர பொருள் சேரும். உடல்சோர்வு ஏற்படும். குடும்ப மேன்மை உண்டு. பணத்தட்டுப்பாடு நீங்கும். மனக்கட்டுப்பாடு அவசியம்.

வழிபட வேண்டிய தெய்வம்: மாசாணியம்மன், அதிர்ஷ்ட எண்: 4,2,9,6
அதிர்ஷ்ட நிறம்: காவி நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,O




**சிம்மம்:** எதிரிகள் உதிரியாகும் வாரம். பிரார்த்தனை நிறைவேறும். பிரபல்யம் ஆகும் வாய்ப்பு வரும். உடல் நலனில் அதிக அக்கறை தேவை. பிள்ளைகளால் அலைச்சல் உண்டு. விளையாட்டுத்துறையில் வெகுமதி கிடைக்கும். உத்தியோக இடமாற்றம் உண்டு. ஷேர் மார்க்கெட்டில் லாபம் உண்டு. வழக்குகள் சாதகமாகும். வாகன மாற்றம் ஏற்படும். பணப்பற்றாக்குறை நீங்கும். குடும்ப குழப்பம் தீரும். மாணவர்களுக்கு கல்வியில் கவனம் தேவை. பெற்றோர் வாழ்த்து உண்டு. முற்போக்கு சிந்தனை வரும். பங்குத்தொழில் பணம் தரும். புதிய எண்ணம் உருவாகும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். கூட்டுத்தொழில் லாபம் தரும். தொலைபேசித் தகவல் தொல்லை தரும். செயல் விவேகம் கூடும். காயத்திரி மந்திரத்தால் கஷ்டங்கள் விலகும். பட்டம் பதவி தேடி வரும். சகோதர வகையில் சச்சரவு ஏற்படும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். கனிவான பேச்சு அவசியம். பணிவான செயல்களால் காரியத்தால் வெற்றி காணும் காலம். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. வினோதமான எண்ணங்கள் விலகும். பிள்ளைகள் தொல்லை அதிகரிக்கும். பெற்றோர் பாராட்டு கிட்டும். கட்டிடத்தொழில் கவனம் தேவை. புதிய முதலீடு உண்டாகும். கற்பனை வளம் பெருகும். பெண்வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். தொழில் வளர்ச்சி மேன்மை தரும். தொல்லை தந்தவர் விலகுவர். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். போட்டிகள் அதிகரிக்கும். மங்களச் செய்தியால் மனம் மகிழும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஜம்புகேஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 3,9,2,1
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,K




**கன்னி:** இல்லம் வளர்ச்சி அடையும் வாரம். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. வினோதமான எண்ணங்கள் விலகும். பிள்ளைகளால் பெருமை சேரும். புதிய முயற்சிகள் பலன் தரும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். பழைய நண்பரால் பணவரவு உண்டு. கன்னிப் பெண்களுக்கு சுபச்செய்தி வரும். கால்நடைகளால் பலன் உண்டு. ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும். ஆடை, அணிகலன் சேரும். மனச் சஞ்சலம் ஏற்படும். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. பஞ்சாயத்து மூலம் பழையக் கடன் தீர்வுக்கு வரும். வாகனத்தில் கவனம் தேவை. குடும்ப ஒற்றுமை மேலோங்கும். வேலையாட்களிடம் கவனம் தேவை. வெளி வட்டாரப் பழக்கம் அதிகமாகும். மாற்று இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். கணவன், மனைவி உறவில் ஒற்றுமை வளரும். பணப்புழக்கம் சீராக இருந்து வரும். வெற்றிப் பாதையில் அடி எடுத்து வைப்பீர்கள். திட்டமிட்ட காரியங்கள் நட்டமில்லாமல் நடக்கும். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். தொலைத்தூர தொடர்பு லாபம் தரும். செல்வாக்கு உயரும். காதலர்களுக்குள் கசப்பு நீங்கும். கடன் சுமை குறையும். கௌரவம் உயரும். கனவுகள் பலிதமாகும். தாய்வழி தகராறுகள் குறையும். வாகனத்தால் செலவு ஏற்படும். பிள்ளைகளின்அன்பு அதிகரிக்கும். சொத்துக்களில் வில்லங்கம் விலகும். எண்ணங்கள் பலிதமாகும். கலகலப்புக் குறையும். உறவினர் வருகையால் செலவு ஏற்படும். சுபிட்ஷங்கள் பெருகும். ஒரு சிலருக்கு கவுரப் பதவி தேடி வரும். அரசியல்வாதிகள் அனுகூலம் பெறுவார்கள். பண நடமாட்டம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சமுக ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: 8,1,2,7
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,E




**துலாம்:** சொந்தங்களால் மனநிறைவு கிட்டும் வாரம். எதிர்ப்புக்கள் விலகும். தென்றல் வீசும். இல்வாழ்வில் இனிமை கூடும். நட்பு வட்டம் விரிவடையும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். கலைஞர்களுக்கு ஒப்பந்தம் குவியும். வெளி தொடர்பு ஆதாயம் தரும். சேமிப்பு வளரும். வியாபாரம் சிறந்து விளங்கும். நீண்ட நாளைய நோய் விலகும். ஆடம்பர செலவு அதிகரிக்கும். செய்த்தொழில் சிறப்படையும். திட்டமிட்ட காரியம் வெற்றி முகமாகும். தன்னம்பிக்கையும், துணிச்சலும் மேலோங்கும். அரசியல்வாதிகள் அனுகூலம் பெறுவார்கள். தொட்டது துலங்கி சட்டென உயரக்கூடிய சாதகமான காலம். பேச்சில் பணிவு தேவை. தனவரவுகள் தடைப்படும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு தோன்றும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். பூமி வாங்கும் யோகம் உண்டு. களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும். ஆடம்பர செலவு அதிகரிக்கும். மாற்று இன நட்பு பெருகும். வங்கி சேமிப்பு உயரும். தொல்லை தந்தவர் விலகிடுவர். திடீர் செலவு ஏற்படும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பிள்ளைகளால் பெருமை சேரும். மனைவியால் மதிப்பு உயரும். குடும்ப மேன்மைகள் உண்டாகும். மனோபயம் நீங்கும். மருத்துவச் செலவு ஏற்படும். உறவினர்களால் தொல்லையுண்டு. கூட்டுத்தொழிலில் லாபம் ஏற்படும். காதலால் மகிழ்ச்சி உண்டு. நோய் நொடிகள் அகலும். வாய்ப்பேச்சில் நிதானம் தேவை. உத்தியோகத்தில் கவனம் தேவை. நிதி நிலைமை சீராகும். உதவிகள் கிடைக்கும். கலை ஈடுபாடுகள் அதிகரிக்கும். பழைய நண்பரை சந்திப்பீர்கள். பிணிகள் நீங்கும். மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பூமாதேவி, அதிர்ஷ்ட எண்: 2,9,6,1
அதிர்ஷ்ட நிறம்: வெளிர்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,L

(தொடர்ச்சி 21 பக்கம்)

# இவ்வார ராசிபலன்

(20 பக்கம் தொடர்ச்சி)




**விருச்சிகம்:** பெத்தவங்களோட ஆசி கிட்டும் வாரம். இல்லத்தில் அமைதி கூடும். கற்பனை ஆற்றல் பெருகும். கடன் பிரச்சனை குறையும். காரிய தாமதம் ஏற்படும். அந்நியர் நட்பு ஆக்கம் தரும். மற்றவரால் ஏமாற்றப்படுவீர்கள். தந்தை நலம் கவனம் தேவை. அனுகூலமான போக்கு நிலவி வரும். ஸ்டேஷனரி தொழில் திருப்பம் தரும். குடும்ப சந்தோ'ம் கூடும். மருத்துவ நிவர்த்தி ஏற்படும். மனைவியால் மதிப்பு உயரும். பழைய பகை மாறும். வாழ்த்துக்கள் வந்து சேரும். வெளியூர் பயணம் வெற்றி தரும். உத்தியோக இடமாற்றம் ஏற்படும். திட்டமிட்ட செயல் வெற்றி தரும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். நெருப்பினால் அபாயம் ஏற்படும். ஆபரணப் பொருள் களவுப்போகும். அத்தியாவசிய செலவு ஏற்படும். உறவினர் வருகை உண்டு. ஆனந்தம் பெருகும். வாகன மாற்றம் உண்டு. வியாபாரம் விருத்தியாகும். பக்கத்து வீட்டு பகை மாறும். புதிய நட்பு உருவாகும். மெத்தனப் போக்கு மாறும். சுயத்தொழில் வாய்ப்பு அமையும். சுபச்செய்தி வரும். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். தந்திரமாக செயல்படுவீர்கள். நண்பர்களால் நன்மை உண்டு. சுயத்தொழில் கவனம் தேவை. பணியில் ஆர்வம் ஏற்படும். பழையக்கடன் வசூலாகும். குடும்ப பாசம் அதிகரிக்கும். உடல் வலி தோன்றி மறையும். பூர்வீகச் சொத்துக் கிடைக்கும். உணவுத்தொழில் உயர்வு பெறும். இனிப்பான செய்திகள் வரும். கல்வியில் கவனம் தேவை. ஏற்றுமதி தொழில் லாபம் தரும். பெரிய வாய்ப்புகள் தேடி வரும். மாற்றங்கள் கிடைக்கும். குடும்ப பாசம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கபாலீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3

அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,Z




**தனுசு:** ஏற்றங்கள் அதிகரிக்கும் வாரம். உடல்வலி தோன்றி மறையும். விருப்பமான தொழில் அமையும். பூர்வீக சொத்து கிடைக்கும். பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். கல்வியில் கவனம் தேவை. ஏற்றுமதி தொழில் லாபம் தரும். வாகனச்செலவு ஏற்படும். செயலில் துணிவு கூடும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். இனிப்பான செய்திகள் வரும். உணவுத்தொழில் உயர்வு பெறும். பிரயாணம் ஏற்படும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பொருளாதாரம் சிறப்பு தரும். பொறுப்புக்கள் கூடும். புதிய நட்புக்கள் உருவாகும். மனைவி உடல்நலம் பாதிக்கும். உறவினரால் பாதகம் உண்டு. இனிய தகவல் வந்து சேரும். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். வேலையாட்களிடம் கவனம் தேவை. வெளிநாட்டு பயணம் ஏற்படும். மாற்று இனத்தவர் நட்பு கிட்டும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். கன்னிப்பெண்களுக்கு சுபச்செய்தி வரும். ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். பழையக்கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். நல்லோர்களின் வாழ்த்து அதிகரிக்கும். தாய்வழி உறவில் சற்று கவனம் தேவை. கலைத்தொழில் திருப்பத்தை ஏற்படுத்தும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். கௌரவம் உயரும். வறுமைகள் ஒழியும். தன லாபம் கூடும். தகுதிகள் உயரும். சான்றோர்களின் சந்திப்பு கிட்டும். தங்க நகைகள் சேரும். சகோதரியால் அனுகூலம் உண்டு. திருமண வாய்ப்பு கூடி வரும். ஜீவ ராசிகளுக்கு உணவு அளிப்பதால் யோக பலன் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: தனதேவதை, அதிர்ஷ்ட எண்: 9,5,4,3

அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,S




**மகரம்:** இழந்த செல்வம் திரும்ப கிடைக்கும். எதிரிகள் பலம் குறையும். வீடு, மனை யோகம் உண்டு. வழக்கு வெற்றி தரும். புதிய கடன் வாங்க நேரிடும். மனதில் உற்சாகம் கூடும். உறவினர்கள் வருகை ஏற்படும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டாகும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். சொத்துச் சேர்க்கையுண்டு. புதிய தொழில் வாய்ப்பு உருவாகும். தாராளமான தனவரவுகள் உண்டு. மனக்கசப்பு நீங்கும். நிதி நிலைமை சீராகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பால்ய நண்பரை சந்திக்க நேரிடும். வழக்கு முடிவுக்கு வரும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். முன்கோபம் தவிர்க்கவும். எதிரிகளையும் நண்பர்களாக்கி ஏற்றங்கள் காணக்கூடிய எதார்த்தமான காலம். லஷ்மி கடாட்ஷம் உண்டாகும். ஆடை, அணிகலன் சேரும். குதூகலமான மனநிலை காணப்படும். பணத்தட்டுப்பாடு ஏற்பட்டு மறையும். தாய்வழி உறவில் கவனம் தேவை. தோற்றப்பொலிவு கூடும். உடல்நலத்தில் அக்கறை தேவை. எதிரிகள் ஏமாற்றம் அடைவர். ஆரோக்கியம் அதிகரிக்கும். கணவன், மனைவி கௌரவம் உயரும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. கடன் தொல்லை தீரும். கட்டிடத்தொழில் கவனம் தேவை. மற்றவர்களால் அனுகூலம் உண்டு. உடல் ஆரோக்கியம் கூடும். வியாபாரம் லாபம் தரும். உயர்கல்வி ஆர்வம் ஏற்படும். மாணவர்களுக்கு படிப்பில் கவனம் தேவை. மங்களச் செய்திகள் வரும். திருப்புமுனைகளை சந்திக்கக்கூடிய காலம். திருமண வாய்ப்பு கூடி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சண்முகப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 3,4,1,9


அதிர்ஷ்ட நிறம்: பொன் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,J




**கும்பம்:** எடுத்த காரியம் வெற்றி பெறும். தொலைநோக்கு சிந்தனையால் விலைமதிக்க முடியாத வெகுமானம் கிடைக்கக் கூடிய அற்புதமான காலம். நிதி நிறுவனம் லாபம் தரும். தொழில் உற்பத்தி அதிகரிக்கும். வாகன யோகம் உண்டு. மாணவர் மதிப்பு உயரும். இனிய சம்பவம் அமையும். குடும்ப மகிழ்ச்சி பெருகும். குதூகலம் அதிகரிக்கும். சகோதரியால் லாபம் உண்டு. மனைவியால் மகிழ்ச்சி உண்டு. கமிஷன் தொழில் லாபம் தரும். வேண்டாத நட்பு விலகும். விரக்தி நிலை மாறும். முடிவுகள் சாதகமாகும். முயற்சிகள் தாமதமாகும். வாகன யோகம் உண்டு. வகையான செல்வம் சேரும் காலம். நல்லோர்கள் வாழ்த்து கிடைக்கும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பேச்சுத்திறமை அதிகரிக்கும். மாலை நேரத்தில் பெண்களுக்கு கவனம் தேவை. பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். சந்தோஷமான நிகழ்வுகளும் சாதகமான சூழ்நிலை உள்ள அற்புதமான காலம். இக்கட்டான சூழ்நிலை அகலும். கடல் கடந்த பயணம் உண்டாகும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். இடமாற்றம் நன்மை தரும். குடும்ப அன்யோன்யம் கூடும். உத்தியோக உயர்வு கிட்டும். பிள்ளைகளால் பெருமை சேரும். பூமி வாங்கும் யோகம் உண்டு. குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். வெற்றி பாதையில் அடி எடுத்து வைப்பீர்கள். பிள்ளைகளால் பெருமை தரும். நல்ல செய்திகள் வரும். ஆறுதலான சூழ்நிலை அமையும். உற்சாகம் களை கட்டும். களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும். கஷ்ட காலம் விலகும். வார்த்தைகளில் கவனம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்ச பூதம், அதிர்ஷ்ட எண்: 5,9,2,1

அதிர்ஷ்ட நிறம்: அரக்கு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,D




**மீனம்:** சாதகமான சூழ்நிலைகள் உருவாகும் வாரம். நண்பர்களின் பேச்சு ஆறுதல் தரும். நீண்ட நாட்களாக நினைத்து வைத்து இருந்த காரியம் இன்று நிறைவேறும். அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். பிள்ளைகளின் உடல்நலனில் அக்கறை தேவை. பெண்களால் பிரச்சனை ஏற்படும். குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும். கடன் வாங்கும் சூழ்நிலை உருவாகும். மனசஞ்சலம் ஏற்படும். பணவரவு சுமாராக இருக்கும். வேண்டாத விஷயங்களை தவிர்க்கவும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. உறவினர் வருகை உற்சாகம் கொடுக்கும். புதிய முயற்சிகளில் கவனம் தேவை. சகோதர வழியில் ஒற்றுமை அதிகரிக்கும். விவேகமான செயல்களால் வெற்றி கிட்டும். திருமண தடைகள் விலகும். கணவன், மனைவி உறவு வலுப்படும். சிறப்போடும், பொறுப்போடும் செயல்படுவீர். திருப்பு முனைகளை சந்திக்கும் காலமாக அமையும். அயல்நாட்டுப் பிரயாணம் கூடி வரும். உறவினர் பகை மாறும். வேலைவாய்ப்பு கிட்டும். எதிர்ப்புக்கள் விலகும். உயர்ந்த நிலை அடைவீர். பொருளாதார நிலை சீராக இருக்கும். கோபம் தவிர்த்து ஆன்மீகத்தில் ஆர்வம் செலுத்த வேண்டும். புதிய நிலம், வீடு வாங்க நேரிடும். கலைஞர்களுக்கு வாய்ப்புக்கள் அமையும். எதிர்ப்புக்கள் குறையும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். ஆரோக்கியத்தில் அக்கறை வேண்டும். விளையாட்டுத் துறையில் வெற்றிக் கிட்டும். காதலர்கள் தம்பதியாவார்கள். செல்வாக்கு மேம்படும். தர்ம சிந்தனை மேலோங்கும். உத்தியோகத்தில் நற்பெயர் கிட்டும். தொழில் வளர்ச்சி கூடும். அலைச்சல் அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: முருகப்பெருமான், அதிர்ஷ்ட எண்: 6,9,2,1

அதிர்ஷ்ட நிறம்: காவி நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,X

# "கரும்புலி மில்லர்" என்ற மாவீரரின் பெயரை வர்த்தகச் சினிமாவிற்கு பயன்படுத்துவது, தமிழர்களின் தியாக வரலாற்றை அவமதிக்கும் செயல்!

## "கரும்புலி மில்லர்" என்ற பெயரை உடனடியாக மாற்றுங்கள்!




தமிழர் விடுதலைப் போராட்ட வரலாற்றில் "கரும்புலி மில்லர்" என்ற பெயர் என்றும் அழியாத வீரத்தையும் தியாகத்தையும் குறிக்கிறது. தன் உயிரை அர்ப்பணித்து, போராட்ட வரலாற்றில் அழியாத சின்னமாக மாறிய கரும்புலி மில்லர் அவர்கள், ஒரே நபரின் தைரியத்தின் மூலம் நூற்றுக்கணக்கான தமிழர்களுக்கு ஊக்கமாக இருந்தார்.

அவரின் பெயர் இன்று சிலர் வர்த்தக நோக்கில் எடுக்கப்படும் ஒரு சினிமாவிற்குப் பெயராகப் பயன்படுத்தப்படுவது மிகுந்த வருத்தத்தையும் கோபத்தையும் அளிக்கிறது. இது ஒரு சாதாரண பெயர் அல்ல - ஒரு தமிழர் தியாகத்தின் சின்னம், ஒரு தலைமுறையின் இரத்தத்தால் எழுதப்பட்ட வரலாறு.

சினிமா உலகம் ஒரு சுதந்திர களமாக இருந்தாலும், தியாகிகளின் பெயர்களை வர்த்தக நோக்கில் பயன்படுத்துவது ஒரு நெறியின்மையான செயல். இப்படி நடந்தால், எதிர்காலத்தில் "கரும்புலி மில்லர்" என்று இணையத்தில் தேடும் இளம் தலைமுறை, மாவீரரின் உண்மையான வரலாற்றை அல்லாமல், வர்த்தகச் சினிமா கதாபாத்திரத்தையே காண நேரிடும். இதுவே ஒரு வரலாற்று அழிப்பின் ஆரம்பம்.

சிலர் "தமிழர் சினிமா எடுக்கிறோம்" என்ற பெயரில் தமிழர் போராட்ட வரலாற்றை கேவலப்படுத்தி, தியாகிகளின் நினைவுகளை வணிக இலாபத்திற்காக பயன்படுத்துகிறார்கள். இது கலை அல்ல - இது தமிழர் வரலாற்றை விற்றொழிக்கும் செயல்.

எனவே, அந்த திரைப்படத்தின் இயக்குநர் மற்றும் தயாரிப்பு குழுவிடம் நான் தாழ்மையுடன், ஆனால் உறுதியுடன் வேண்டுகோள் விடுக்கிறேன்:

- "கரும்புலி மில்லர்" என்ற பெயரை உடனடியாக மாற்றுங்கள்.
- மாவீரர்களின் பெயர்களை வர்த்தக நோக்கில் பயன்படுத்தாதீர்கள்.
- தமிழர் வரலாறு, தியாகம், வீரத்துக்கு உரிய மரியாதையை காத்திடுங்கள்.

ஒரு சினிமா ஒரு பெயரை மாற்றிக்கொள்ள முடியும்.

ஆனால் ஒரு தியாகத்தின் அர்த்தம் அழிந்துவிட்டால், அதை மீண்டும் உருவாக்க முடியாது.




கரும்புலி மில்லர் ஒரு பெயரல்ல - அது ஒரு வீர காவியம்.

**- எழுதியவர்: "ஈழத்து நிலவன்"**



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும் 1170

## [வரலாறும் மரபும்]

## பஉவதவஉத்தினி சமேத பசுபதீஸ்வரஉ திருக்கோயில்

### [பருத்தித்துறை சிவன் கோயில்]

### புலோலி, பருத்தித்துறை



பல நூற்றாண்டுகளுக்கு முன்புவரை, தென்னாட்டிலிருந்து வர்த்தகர்களும், யாத்திரீகர்களும் எவ்வித கட்டுப்பாடுமற்ற முறையிலே, ஈழத்திற்கு வந்து சென்றுள்ளனர். அவ்வாறு வருகின்ற யாத்திரிகர்களும், சந்நியாசிகளும் தாம் தங்குமிடங்களில், தம்முடன் கொண்டுவரும் திருவுருவங்களை வைத்து வழிபாடியற்றி வந்துள்ளனர். பின்னர் அவற்றை தமது எண்ணத்தில் தோன்றியவர்களிடம் கொடுத்து, குறிப்பிட்ட இடத்திலே ஆலயம் அமைக்கும்படி கூறிவிட்டுச் செல்வது வழக்கமாக இருந்துள்ளது. இவ்வாறாக ஞானியரின் திருவாக்குக்கமைய அமைக்கப்பட்ட பல கோயில்கள், ஈழமெங்கும் காணப்படுகின்றன.

பருத்தித்துறைப் பிரதேசத்தில் அமைந்துள்ள புலோலி என்ற இடத்திற்கு, ஒரு சுவாமிகள் இந்தியாவிலிருந்து வருகைதந்தார். அச்சுவாமிகள், இக்கோயில் அமைந்துள்ள இடத்திலே நின்ற கொன்றை மரத்தின் கீழ் தங்கியிருந்தார். அவர் வரும்பொழுது தன்னுடன் கருங்கல்லிலாலான பிள்ளையார், தாமிரத்தினாலான வீரபத்திரர் போன்ற திருவுருவங்களைக் கொண்டு வந்துள்ளார். தான் தங்கியிருந்த கொன்றைமரத்தின் கீழ் பிள்ளையார், வீரபத்திரர் திருவுருவங்களை வைத்து பூசையாற்றி வழிபாடு செய்துவந்தார்.

இச்சுவாமிகள் அருட்சக்தி நிறைந்தவராக விளங்கியுள்ளார். கொன்றைமரத்தின் கீழ் தங்கிருந்த சுவாமிகள், வைத்தியம் தெரிந்தவராகவும் விளங்கியுள்ளார். சுவாமிகள், அவ்வூர் மக்ளோடு பழகியதோடு, அம்மக்களுக்கு ஏற்படும் நோய்கள் நீங்க வைத்தியம் செய்தார். இவர் மந்திரங்கள், சித்துக்கள் தெரிந்தவராதலால் பல அற்புதங்களை நிகழ்த்தினார். இக்காரணங்களினால் இவரது புகழ் ஊரெங்கும் பரவியது. தமது நோய்பிணி நீங்கவும், தொல்லைகள் தீரவும் உதவிவேண்டி, இவ்வூர் மக்கள் சுவாமிகளை நாடி வரத் தொடங்கினர்.

இவ்வாறு தன்னை நாடி வரும் மக்களுக்கு, தான் தங்கியிருந்த இடத்திற்கு அருகிலுள்ள குளத்து மண்ணை எடுத்து, அம்மக்களின் நோய்தீரும்படி செய்துள்ளார். சுவாமியின் அருமை பெருமைகளைக் கேள்விப்பட்டு, திரு.சுப்ரமணியம் கணபதிப்பிள்ளை என்பவர், சுவாமியின் அன்பராக விளங்கினார். அவ்விடத்திலே ஆலயம் ஒன்றை அமைக்கவேண்டும் என்ற பெருவிருப்புடையவராக இவர் காணப்பட்டபோதிலும், பொருள்வசதியின்றி வருத்தப்பட்டார். இவரது எண்ணத்தை அறிந்துகொண்ட சுவாமிகள், அவரை அழைத்து "கோயில் அமையும் கவலைப்படாதே" எனக் கூறி, அருகில் தூர்ந்து காணப்பட்ட குளத்தைக் காட்டி, "இக்குளத்தை தூரெடுத்து நன்னிலைப்படுத்து பணம் கிடைக்கும்" என அருள்வாக்களித்தார். சித்தர்களின் வாக்கு பொய்ததில்லை என்பதை சமய வரலாறு பல சந்தர்ப்பங்களைக் சுட்டிக்காட்டியுள்ளது. சுவாமியின் வாக்கும் பொய்க்வில்லை.

சுவாமியின் திருவாக்கை கருத்திற்கொண்ட திரு. சுப்ரமணியம் கணபதிப்பிள்ளை அவர்கள், குளத்தைத் தூ ர்எடுத்து ஆலயத்தை அமைக்கவும் எண்ணங்கொண்டார். அப்பொழுது அவரை அழைத்த சுவாமிகள், "எல்லா உயிர்க்கும் தலைவனாக விளங்கும் பசுபதியின் பெயரை, இங்கு எழுந்தருளப்போகும் இறைவனுக்குச் சூட்டும்படி கேட்டுக் கொண்டார். சிலகாலம் அங்கு வாழ்ந்த சுவாமிகள் சமாதியடைந்தார். சுவாமிகளது சமாதி, இவ்வாலயத்திலே அமைந்துள்ளது. இவ்வாறான செவிவழி வரலாற்றின் அடிப்படையிலேயே, இவ்வாலயம் அமைந்த வரலாறு காணப்படுவதோடு, கோயிலின் பெயர்க் காரண-மும் அமைந்துள்ளது.


சிவபெருமானின் மூர்த்திபேதங்கள் அறுபத்தி நான்கெனக் கூறப்பட்டுள்ளது. இவற்றுள் பசுபதிமூர்த்தியும் ஒன்றாகும். இப்பெயரில் அமைந்த திருவுருவ வழிபாடு அருகியே காணப்படுகின்றது. இலங்கை, இந்தியா போன்ற நாடுகளிலுள்ள பெரும்பாலான சிவன் கோயில்களில், அறுபத்துநான்கு மூர்த்தங்களுள் இலிங்கம், இலிங்கோற்பவர், சந்திரசேகரர், சோமாஸ்கந்தர், பை-ரவர், வீரபத்திரர், நிருத்தமூர்த்தி, தட்சிணாமூர்த்தி, ஆகிய ஒன்பது மூர்த்திகளை வழிபடுவதே சாதாரண வழக்காகக் காணப்படுகின்றது. சுவாமிகள் தன்னுடன் வரும்பொழுது கொண்டுவந்திருந்த வீரபத்திரர் திருவுருவமும், சிவனின் அறுபத்து நான்கு பேதங்களுள் ஒன்றாகக் காணப்பட்டமை, சுவாமிகள் சிவவழிபாட்டில் கொண்ட ஈடுபாட்டை எடுத்தியம்புகின்றது.

இக்காரணத்தினாலேயே தான் தங்கியிருந்த இடத்திலே பசுபதீஸ்வரர் கோயிலை நிறுவும்படி கேட்டுள்ளார். சுவாமிகளின் அருள்வாக்கிற்கமையை குளத்தைத் தூரெடுத்து அந்தத் திருப்பணியை திரு. சுப்ரமணியம் கணபதிப்பிள்ளை அவர்கள் நிறைவேற்றினார்கள். இதனைத் தொடர்ந்து கோயில் அமைக்கப்பட்டு, அதன் பணிகள் சிறப்பாக நிறைவேற்றப்பட்டதோடு, பல வழிகளிலும் இக்கோயில் வளர்ச்சி பெற்றுக் காணப்பட்டது. 1814 ஆம் ஆண்டு காலப்பகுதியில், திரு சுப்ரமணியம் கணபதிப்பிள்ளை அவர்களாலேயே இக்கோயிலின் நிர்வாகம் நடைபெற்றுள்ளது.

புலோலி பர்வதவர்த்தினி சமேத பசுபதீஸ்வரர் தேவஸ்தானத்தில் எழுந்தருளியுள்ள மூலமூர்த்தியாகிய பசுபதீஸ்வரர், சிவனின் அறுபத்திநான்கு பேதங்களுள் குறிப்பிடத்தக்கவர். இத்திருவுருவம் யோகநிலையினை நினைவூட்டுவதாகக் காணப்படுகின்றது. சிந்துநாகரிகம் வரலாற்றுச் சிறப்புடையது. தொன்மைமிகக் கொண்ட இந்நாகரிகத்திலே சைவசமயம் மிக உயர்ந்த நிலையிலே காணப்பட்டாக, சேர் ஜோண் மார்சல், மக்கே போன்ற ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். இங்கு கண்டெடுக்கப்பட்ட திருவுருவங்களுள் பசுபதி வடிவமும் ஒன்று. இவ்வடிவம் மிருகங்களால் சூழப்பட்டநிலையிலே காணப்படுகின்றது. இவ்வாறான யோகவடிவிலான திருவுருவங்கள் சிந்து வெளியிலே கண்டெக்கப்பட்டமை, இப்பிரதேசத்திலே சைவசமயம் வேரூன்றி இருந்தது என்பதை சுட்டுகின்றது.

**- வளரும்**

ஆய்வு நூல் வெளியீடு அழைப்பிதழ்







Dr. புட்பா கிறிட்டி Ph.D. அவர்கள் எழுதிய
"நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் தமிழ், சமய, சமூகப்பணிகள்"

காலம் : நவம்பர் 16, 2025, ஞாயிற்றுக்கிழமை
நேரம் : மாலை 6 மணி
இடம் : புனித ஆரோக்கிய மாதா ஆலய மண்டபம்
(Our lady of Good Health)
131 Birchmount Rd. Toronto, ON, M1N 3J7
(Birchmount and Danforth Avenue)

அன்புடையீர், வணக்கம்.

எனது முனைவர் பட்ட ஆய்வினை தமிழ் அறிஞர் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் புகழினை உலகிற்கு உணர்த்தும் வகையில் அதனை ஒரு இலக்கியமாக படைத்துள்ளேன். அதன் வெளியீட்டு விழாவினை சிறப்பாக கொண்டாட உங்களை அன்புடன் அழைக்கின்றேன்.

இப்படிக்கு அன்புடன்
முனைவர். புட்பா கிறிட்டி
மற்றும் வெளியீட்டு விழாக் குழுவினர்

தொடர்புகளுக்கு : 647 703 5538

**ONTARIO SENIOR TAMILS BENEVOLENT ASSOCIATION (OSTBA)**
**EST. 2012. REG: NOT FOR PROFIT ORGANIZATION #1866873, ONTARIO, CANADA**
ஒன்டாரியோ முது தமிழர் நலன்புரி ஆதாயமற்ற சங்கம் # 1866873
**Address: OSTBA, PO. Box 48068 Dundas & Sheppard, Mississauga ON L5A 4G8**



## Helping Seniors Live with Dignity, Security, and Peace of Mind:

As many of our seniors reach advanced age, it is natural to experience concerns about health, financial security, and emotional well-being. Feelings of loneliness, neglect, and even elder abuse are unfortunate realities for some in our community. In this context, any collective and cooperative effort to improve our financial and emotional security can go a long way toward alleviating these worries and restoring peace of mind. Establishing a self-funded Death Donation Reserve Fund, exclusively contributed to by members, to support families at the time of a member's passing. Inspired by similar Tamil benevolent organizations in Sydney, Australia, OSTBA was officially registered as a not-for-profit organization in Ontario in 2012. Since its inception, OSTBA has made payments to the families of seventy-seven (77) members. We have members from numerous Senior Tamil Organizations in Ontario.

## Membership Eligibility:

To become a member of OSTBA, you must:

- Be between the ages of 60 and 75
- Be a citizen or permanent resident of Canada
- Be free from any terminal illness at the time of application
- Be a paid member of a recognized Tamil seniors association (provide name and membership number)
- Provide two nominees, one of whom will receive the Death Donation upon your passing (subject to OSTBA constitution requirements)
- Declare that the information in your application is true and agree to abide by the OSTBA Constitution



## Membership Contributions & Benefits:

- Initial deposit starts as low as $95.00
- Annual Membership fee is $20.00
- On each death call, members contribute $20.00
- Members must maintain a minimum balance of $85.00 in their account
- In recent months (2025), the average payout to the family of a deceased member was approx. $4,700.00 while each member only contributed $20 per call
- Contributions are held in the Death Donation Reserve Fund (By-Law #3.2)
- No office or administrative overheads as OSTBA is entirely run by an elected volunteer Board operating remotely

## Important Membership Conditions:

To become a member of OSTBA, you must:

- You are a Provisional Member for the first 12 months from your initial payment
- No benefits are available during the first year of membership
- Members may also make a special declaration to assign benefits to two individuals, subject to OSTBA's constitution.

For more information
please contact:
Tel: **416-473-6880 / 416 -629-0065**
Email: **ostba2019@gmail.com**
Web: **ostb5.ca**

மொன்றியல் நகரில் உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

மதுரை ஸ்ரீ மீனாட்சி அம்மன் துணை
மதுரையில் இருந்து மீண்டும் வருகை
ஜாதகம் பார்க்கப்படும்
பிறந்த வருடம், மாதம், திகதி சொன்னால் போதும் நாள், நட்சத்திரம், ராசி பார்த்து நடந்தது நடக்கப்போவது பற்றிய பலன் சொல்லப்படும். திருமணப் பொருத்தம் மற்றும் குழந்தைகளுக்கு குறிப்பு எழுதிக் கொடுக்கப்படும்.
கோ. காசி (மதுரை) Phone:- 437-925 5643 Whatsapp:- 437- 329 4164

Matt Mathisayan
Sales Representative
647 268 9219
905 201 9977
905 201 9929
mattmathisayan@gmail.com
Follow me on
HomeLife/Future Realty Inc.
7 Eastvale Dr #205, Markham, On L3S 4N8



26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்



இவ்விடத்தில் விளம்பரம் செய்ய எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.
416 752 1524



உதயம் 1543 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday October 31, 2025


# ஒட்டாவா மாநகரில் அமைந்துள்ள கனடிய பாராளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற "தீபாவளித்திருநாள்" விழா

## "எமது அமைச்சரவை சகாவான ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் "ஒரு துணிச்சல் மிக்க" அரசியல் தலைவர்" என கனடாவின் வெளிவிவகார அமைச்சர் அனிற்றா ஆனந்த் புகழாரம்





கடந்த 28-10-2025 அன்று செவ்வாய்க்கிழமை கனடாவின் தலைநகர் ஒட்டாவா மாநகரில் நடைபெற்ற "தீபாவளித் திருநாள்" விழாவில் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் இலங்கைத் தமிழர்மற்றும் இந்தியச் சமூகம் சார்ந்த பிரதிநிதிகள். சமய ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள். குருமார்கள் உட்பட பலரும் கலந்து சிறப்பித்தனர்.

அன்றைய வைபவத்தில். கனடிய வெளிநாட்டு விவகாரங்களுக்கான அமைச்சர் அனிற்றா ஆனந்த் அவர்களுடன் நமது தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான ஹரி ஆனந்தசங்கரி அவர்களும் ஏனைய பல பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்தார்கள்.

அங்கு உரையாற்றிய அமைச்சர் அனிற்றா ஆனந்த் அவர்கள் ஹரி ஆனந்தசங்கரியைப் பாராட்டியும் சில வார்த்தைகளைப் பகிர்ந்து கொண்டு புகழுழாரம் சூட்டினார். " எமது அமைச்சரவை சகாவான ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் ஒரு அரசியல் தலைவர் என்றும் அத்துடன் "ஒரு அசத்தலான மனிதர்" என்றும் எமது அமைச்சரைவையில் தீர்க்கமான முடிவுகளை எடுக்கும் முக்கிய பங்களிப்பையும் அவர்கள் வழங்கி வருகின்றார்" என்று புகழாரம் சூட்டிய அவர் அங்கு சமூகமளித்திருந்த ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவித்து தனது உரையில் தீபாவளித் திருவிழாவின் புனிதம் பற்றியும் விளக்கமளித்தார்.

இங்கே காணப்படும் படங்களில் **Markham Boxgrove Tamil Seniors Club** அமைப்பின் தலைவி திருமதி சுந்தரேஸ்வரி யோகராஜா அவரது கணவர் யோகராஜா அவர்கள். வர்த்தகப்பிரமுகர் மற்றும் **BEHIND ME INTERNATIONAL MEDIA** நிறுவன அதிபர் கனா செல்வா மற்றும் மற்றுமொரு வர்த்தக அன்பர் தனா யோகநாதன் மற்றும் உதயன் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் உட்பட திரு கரிகாலன் மற்றும் பாலேந்திரா பெரியசாமி உட்பட மொன்றியால் வாழ் தமிழ் பேசும் அன்பர்களும் காணப்பெறுகின்றார்கள்.

# "எமது மண்ணில் தமிழ் மக்களுடைய இருப்பு கேள்விக்குறியாக உள்ள காலப்பகுதியில் அவர்கள் பாதுகாப்பிற்காகவும் இறையாண்மைக்காவும் குரல் கொடுக்கக் கூடிய அமைப்பு "உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம்" ஆகும்"

## ஜேர்மனி தேசத்தில் நடைபெற்ற இயக்கத்தின் 52வது எழுச்சி மாநாடும் செந்தமிழ் கலை மாலை பண்பாட்டு விழாவில் உரையாற்றிய இயக்கத்தின் அகில செயலாளர் நாயகம் துரை கணேசலிங்கம் முழக்கம்

"நீண்ட காலமாக எமது மண்ணில் இடம்பெற்ற போர் மற்றும் இன அடக்குமுறை நடவடிக்கைகள் மற்றும் அரச பயங்கரவாதம் ஆகியவை காரணமாக எமது தாய்மண்ணில் தமிழ் மக்களுடைய இருப்பு என்பது கேள்விக்குறியாக உள்ளது. இவ்வாறான காலப்பகுதியில் அவர்களின் பாதுகாப்பிற்காகவும் இறையாண்மைக்காவும் குரல் கொடுக்கக் கூடிய ஒரே அமைப்பு "உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம்" என்னும் உன்னத இயக்கமே ஆகும். எனவே 52 ஆண்டு கால பழைமையும் பெருமையும் மிக்க இந்த இயக்கத்தை கட்டிக்காக்கவும் எமது மக்களின் பண்பாடு. தமிழ்க் கல்வி, உலகத் தமிழர்களின் ஒற்றுமை ஆகியவற்றையும் உறுதியுடன் பேணும் வகையில் எமது இயக்கத்தை மேலும் முன்னேற்றப் பாதையில் நகர்த்திச் செல்ல வேண்டும். அத்துடன் எமது புனிதமான இயக்கத்தின் பயணத்தில் சில பாதகமான செயற்பாடுகளை உலகின் சில நாடுகளில் மேற்கொள்ளும் "புல்லுருவிகளை" நாம் ஒன்றிணைந்து "முளையிலேயே" கிள்ளி எறிய வேண்டும்" (தொடர்ச்சி 14ம் பக்கம்)





# ஸ்காபரோவில் அமையவுள்ள தமிழ்ச் சமூக மையத்திற்கு கனடா வாழ் தமிழ்க் குடும்பங்களும் அமைப்புக்களும் தமது ஆதரவை வழங்கிவருகின்றனர்





ஸ்காபரோவில் அமையவுள்ள தமிழ்ச் சமூக மையத்திற்கு கனடா வாழ் தமிழ்க் குடும்பங்களும் தமிழர் அமைப்புக்களும் தனித்தனியாக ஆதரவு வழங்கி வரும் நிலையில் பிரபல வீடு விற்பனை முகவரும் சுமார் 25 வருட கால விற்பனை அனுபவம் கொண்டவருமான திரு. ரா நடராஜா, தனது குடும்பம் சர்பாக தமிழ்ச் சமூக மைய கட்டட நிதிக்காக 10,000 டாலர்கள் நன்கொடை வழங்கினார்.

அத்துடன். கனடாவில் அமையவுள்ள தமிழ் சமூக மையத்தின் நிதிக்காக - இணுவில் திருவூர் ஒன்றியமும் தனது நன்கொடைக் கரத்தை நீட்டி, தனது வரலாற்றுக் கடமையை நிறைவேற்றியுள்ளது.

அண்மையில் நடைபெற்ற ஒன்றியத்தின் நிகழ்வொன்றி ஒன்றியத்தின் சார்பாக தமிழ்ச் சமூக மையத்திற்கு 10,000 டாலர்கள் நன்கொடை வழங்கியது. மேற்படி இரண்டு நிதி அன்பளிப்புக்களையும் தமிழ்ச் சமூக மையத்தின் சார்பில் அதன் நிதி சேகரிப்பு குழுவின் முக்கிய பிரதிநிதியும் வர்த்தகப் பிரமுகருமான சாந்தா பஞ்சலிங்கம் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

2027ஆம் ஆண்டுக்குள் முதல்கட்ட கட்டுமானப் பணிகளை முடிப்பதற்கு மத்திய, மாகாண அரசுகள் வழங்கியுள்ள நிதியைப் பெறுவதற்கு தமிழ்ச் சமூகம் சார்பாக 15 மில்லியன் டொலர்களைப் பங்களிப்புச் செய்ய வேண்டும். இதற்கமைய ஒவ்வொரு குடும்பமும் 10,000 டொலர்களைப் பங்களிப்புச் செய்வதை உறுதி செய்து வருகின்றனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.


தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan Broker
Joy H. Selvanayagam Broker